சுன்னுகம், மன்மத புரட்டாதி ௩௦ ✱ (16 – 10 – 55) ஞாயிறு

# ஈழகேசரி

EELAKESARI – NATIONALIST TAMIL WEEKLY

மலர் 26 இதழ் 16 | தேசிய வார வெளியீடு ○ கிறுவியவர் : நா. பொன்னையா | தனிப் பிரதி சதம் 10

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — றேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள்
விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

★ சிங்கள முன்னணிபோன்ற வகுப்புவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்களே குழப்பத்தின் மூலம் மொழிச் சிக்கலுக்கு முடிவுகாண முயலுகிருர்கள்.


# மொழியின் பெயராற் குழப்பங்கள்

## நகரசபைக் கூட்டத்திற் பிக்குகள் கலகம்

## தமிழ்க் கடைகளை அடித்து உடைத்து அழிவுவேலை

கொழும்பு, 13–10–55

அரசியற் 'புரட்சிக்காரர்' என்று கூறப்படும்தோழர் கள்கூட இருமொழிச் சமத்துவக் கொள்கையை ஆதரிக்கிருர்களென்பது, தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துத் தருதல் அவசியம் என்று கோருவோருக்கு உற்சாகம் தரும் செய்தியாகும். இருமொழிகளும் நாட்டின் நிர்வாக மொழிகளாக ஆகவேண்டுமென்ற கொள்கையை உடைய பொதுவுடைமைத் தோழர்கள் நகரசபை மண்டபத்திற் சென்ற 12–10–55 புதன்கிழமை மாலை நடாத்திய கூட்டத்திலே, தமிழ்மொழிப் பேச்சாளர் ஒருவருக்குக்கூட இடந்தாது விட்டுவிட்டமை விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. இருமொழிக் கொள்கையை வற்புறுத்துவதானதொரு கூட்டத்திற்சிங்களமாகிய ஒரு மொழியிலே




யே வெளுத்துவாங்கிய பேச்சாளர்கள், கடைசிநேரத்தில் ஆங்கிலத்துக்கு ஒரு சில இடம்வழங்கியபோதும், 'சுவ பாஷா'க்களுள் ஒன்ருகிய தமிழுக்கு இடம்கொடுக்க மறந்துபோய்விட்டார்கள்! தோழர் கெனமன் பேசுகையில், ஒரு மொழியின் சவக்குழியின்மேலே இன்னொரு மொழியை நாட்டி வளர்க்க முயல்வது பேதைமையாகும் என்று ஒரு மொழிக் கொள்கையாளர்களைக் கண்டித்தார்.

### பெருங் குழப்பம்

ஆயினும இக் கூட்டத்திலே ஏற்பட்ட குழப்பங்கள் இங்குள்ள இன ஒற்றுமையை விரும்புவோருக்கு மனக் கசப்பை அளிப்பனவாக உள்ளன. சாந்தமூர்த்தியான புத்தபகவானின் அன்புமதத்துக்கு ஆவியை அர்ப்பணஞ் செய்த பிக்குகள் சிலர், பலாத்காரத்தைப் பிரயோகித்துக் கலகம் விளைவிக்க முயன்றிருக்கிருர்கள். நாற்காலிகளும், தடிகளும், கல்லுகளும் அவர்களது ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முச்சிங்களமுன்னணிபோன்ற வகுப்புவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்களே குழப்பத்தின் மூலம் மொழிச்சிக்கலுக்கு முடிவுகாண முயலுகிருர்கள். நகரமண்டபத்துக்கு அருகாமையிலுள்ள கடை ஒன்று தமிழர்களால் நடத்தப்படுகின்றது. கலகக்காரர் அக்கடையுட் சென்று, பொருட்களை அடித்து உடைத்துக், கொட்டிச் சிந்தி அழிவு செய்திருக்கிருர்கள் என்றுல் இவர்களின்போக்கையிட்டு இன்னும் என்ன சொல்லவேண்டியிருக்கிறது?

### குடியுரிமைச் சிக்கல்

இலங்கை இந்தியர் சிக்கலைத் தீர்க்கமுடியாது திண்டாடும் நமது ஆட்சியாளர், இந்திய முதலமைச்சர் நேருவுக்கு இன்னுமொரு கடிதமனுப்புவதென்ற முடிவுக்கு வந்திருக்கிருர்கள். சென்ற ஆண்டு நிறைவேறிய இலங்கை இந்திய ஒப்பந்தம், சேர் கொத்தலாவல அவர்களை இருமுறை டில்லிக்கு அலையவைத்ததோடு, உருப்படியான பலன் எதையும் தராதுவிட்டது பெருத்த ஏமாற்றத்தையே அழிப்பதாகும். இதற்கான காரணங்களை ஆராய்கையில் இருசாராரும் எதிர்த்தரப்பினரின் தலையிலேயே குற்றம் முழுவதையும் சுமத்திவிட்டுச் செயலற்று வாளாவிருந்துவிடுவதால், குடியுரிமைச் சிக்கல் இந்நாட்டில் என்றென்றும் தங்கியேதீருவதென்று உறுதியாகத் தீர்மானித்துவிட்டது,

இவ் ஒப்பந்தத்தைத் தொழிற்படுத்துவதில்உள்ள சில சங்கடங்களையிட்ட சில சந்தேகங்களைக் குறித்து நமது அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்பு திரு. நேரு அவர்களுக்குக்கடிதமொன்றுஅனுப்பிவைத்தது; ஆனாலும் என்ன ஏமாற்றம்! அக் கடிதத்துக்கு இந்திய முதலமைச்சர் அனுப்பிவைத்துள்ள பதில், நமது ஆட்சியாளர்களது நியாயத்துக்குப் புறம்பான கொள்கைகளையும் கோரிக்கைகளையும் நிராகரித்துத் தள்ளுவதாக அமைந்து விட்டது. தங்களது கோரிக்கைக்குப் பாதகமானதொரு கடிதத்தில் உள்ளவற்றை ஏற்றுக்கொள்ளுவார்களா, நமது ஆட்சியாளர்கள்? நேருவின் கடிதத்திற்குப் பதிற் கடிதம், வெகு காரசாரமான கடிதம் போகப் போகிறது, இந்தியாவுக்கு.

### தில்லிவதந்தி

இதற்கிடையில், இன்னொருமுறை இலங்கையின் தூது

(தொடர்ச்சி 7ஆம்பக்கம்பார்க்க)



மட்டக்களப்பு வாடி வீட்டிலிருந்து கிளம்பிய செய்திக்கு திரு. இராசமாணிக்கம் எம். பி. தரும் விளக்கத்தை 7ஆம் பக்கத்திற் பார்க்க!

# வாடி வீட்டு மகாநாடு

## பரபரப்புண்டாக்கிய செய்தி

### குழாய் நீர் வசதிக்கு 2 இலட்சம்


கிழக்குத்தபால்: : : ஊரி

'மட்டக்களப்பு' 12-10-55

சென்ற வாரம் மட்டக்களப்பில் நடந்த பெரும்பகுதி விவசாய மகாநாடு முக்கியமான ஒன்ருக இடம்பெற்றுவிட்டது. இதன் முடிவிலே வாடிவீட்டில் நடந்த மதிய உணவின்போதுதான் கிழக்கு மாகாண எம். பிக்கள் சிங்கள மொழியே இலங்கையின் அரசகரும மொழியாக வேண்டும் என்று முடிவுசெய்ததாகப் பத்திரிகைகள் கூறிய மொழிச் சிக்கலைப் பற்றிய பேச்சுகளும் நடந்தனவாகும். எங்கும் பெரும பரபரப்பை ஏற்படுத்தியதும் ...த்த எம். பி.க்களுக்கு ... மனக் கருத்தைப் ...க்களி... ட எழுப்பியது ...பற்றிப் பட் ...ந்தி திரு. எஸ். ...ாணிக்கம் அவர் ...போது இக்கிலை ...ாக அவர் மிகு ... தெரிவித்தார். ...ாடு முடிந்த ...ும் திருவாளர் ..., நல்லையா, ஆகிய ... இருவரும் காரி ... சிலர் உட்பட்ட ... மதிய உணவுக் ...க்குச் சென்றிருந்தபோது சாதாரண பேச்சுகளுக்கிடையே இலங்கையின் மொழிப் பிரச்சினை பற்றியும் எழுந்ததாகவும் அப்பேச்சு எந்த நல்ல முடிவையும் தரக்கூடியதொன்றல்ல வென்று கருதியதால் தான் அதிலிருந்து விலகியிருந்ததாகவும், திரு மேர்ஸா அவர்களும் அக் கொள்கையில் தன்னையே பின்பற்றியவராகத் தெரிந்ததாகவும் மற்றையோரிடையே சிங்களமொழியை ஆதரித்த முடிபு தொனித்ததாகவும் அவர் கூறினுர். அது மொழிபற்றிய முடிபுக்கென்றமைந்த ஒரு மகாநாடல்லவென்றும் தன் பெயரையும் பிழைபடச் சேர்த்துப் பொதுமக்களின் வெறுப்பை இவ்வேளையிற் தூண்டிவிட்ட பத்திரிகைகள் மீது தாம் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடுகள் செய்வதாகவும் அவர் மேலும் கூறினுர். ஈழகேசரிக்கு இது பற்றிய விரிவான அறிக்கையொன்றைத் தாம் உடன் எழுதி அனுப்பிவிட்டதாகவும் இராசமாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்கள். பத்திரிகைகளிற் கண்ட செய்தி முரண்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)


# புதிய ஜே. பி: வழக்கறிஞர் இராசநாயகம்



[திரு. வ. இராசநாயகம், ஜே. பி.]

பலாலி தெற்கு வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம் அவர்கள் யாழ்ப்பாணப் பிரிவுகளுக்குச் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மயிலிட்டிக் கிராம சங்கம், கிழக்கு மயிலிட்டிப் பற்று ஐ. வி. உ. வி. சங்கம், வலிகாமம் வடக்குக கிராம முன்னேற்றச் சங்கசமாஜம், பலாலி–வயாவிளான் கி. மு. சங்கம் முதலிய சங்கங்களின் தலைவராவர். இவற்றில் மாத்திரமன்றி, சமய, சமூக, கல்வி, கலாசார, பொருளாதார நன்னிலை கருதி உழைக்கும் இயக்கங்கள் பலவற்றின் நிருவாகசபைகளில் இருந்தும் தொண்டாற்றி வருகின்ருர். இவர் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை, வயாவிளான மத்திய கல்லூரி, பலாலி ஆசிரிய கலாசாலை, வயாவிளான் வாசிகசாலை, மயிலிட்டி மருந்துச்சாலை, வயாவிளான் தபாற் கந்தோர், கிழக்கு மயிலிட்டிப்பற்று விளைபொருட் பண்டகசாலைஎன்பவற்றையும், தெருக்கள், சந்தைகள் பலவற்றையும் அமைக்கவும், பலாலி வானூர்தி நிலையத்தைப் பொதுசன உபயோகத்துக்குக் கொணரவும் முக்கிய கடமை புரிந்துள்ளார். இப்பொழுது மயிலிட்டிப் பகுதியினருக்கு வீட்டுத் தேவைக்கு மாத்திரமன்றி நீர்ப்பாய்ச்சற் தேவைக்கும் மின்சாரம் பெற்றுக்கொடுக்க முயலுகின்ருர். இவற்றுடன் இவர் ஒரு தமிழ்க் கவிஞர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

...ர்கள் வாழும் இடங்கள் எல்லாம் சென்று மகிழ்வூட்டுவது ஈழகேசரியே



# நமது வாசிகசாலை

நாவலர் பெருமான்:—ஆசிரியர்: வித்துவான் ஈா. மாயாண்டி பாரதி, தமிழ் விரிவுரையாளர்: தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை; விற்பனையாளர்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை 5. விலை: ரூபாய் 2.

'நாவலர் பிறந்தது முதல் தமிழே நினைந்து தமிழே பேசி தமிழே உயிர்த்துத் தமிழருக்காகத் தம் வாழ்வைத் துறந்த தண்டமிழ்த் துறவி' என இந் நூலாசிரியர் வித்துவான் மாயாண்டி பாரதி நாவலர் பெருமான் என்ற தமது நூலின் 55ஆம் பக்கத்திற் குறிப்பிடுகிறார். மொழிச் சிக்கல் எல்லோர் உள்ளங்களையும் கலங்கச் செய்யும் இந்நாளில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் தாய்மொழியின் வாழ்வுக்காக வாழ்ந்த ஒரு மகானைப்பற்றிக் குறிப்பிடும் பெரியார் கூறும் உண்மையைத் தமிழுலகம் முழுவதும் நன்கு சிந்திப்பதாகுக.

எத்தனைக் கஷ்டங்களின் நடுவில் நாவலர் பெருமான் இத் தொண்டுகளைச் செய்தார் என்பதனைப் பெருமானுர் அருமை வாக்காலேயே கேட்போமாக: "தன் இம்மைப் பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருடகாலம் சைவசமய விருத்தியின்பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றச் சமயத்தார்களுள் இருப்பானுயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்திபெருது? நம்முடைய சைவசமயிகள் தங்கள் சமயமும் மொழியும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றுர்கள். இதனுல் எனக்கு யாதாயினும் ஒரு குறைவுண்டு என்னும் கவலை எனக்குச் சிறிதுமில்லை. எனக்குச் செய்யப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும பிறருக்குத் தமிழ கற்றலின் கண்ணும் தமிழ்க் கல்வியையும் சைவ சமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கங் கிளராவண்ணம் தடை விளைக்கின்றதே என்னும் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. நிலையில்லாத என சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னுங் கவலை என்னை இரவும பகலும் வருத்துகிறது. அக் கருத்து இது: தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் வளர்ச்சியடைவதற்குக் கருவிகள் முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை தோற்றுவித்தலும், சைவப் பிரசாரம் செய்வித்தலுமேயாம்'' இத்தகைய இடுக்கண் விளைக்கும் மக்களிடையேயிருந்து அவர்களுக்குத் தொண்டாற்றத்தன்னலந்துறந்த சிவபக்தி மிக்காரொருவரால் மாத்திரம் முடியுமன்றி வேறெவராலும் முடியாது.

இந் நூலாசிரியர் நாவலர் சரிதத்தை விரித்து எழுதினரல்லர். ஆயினும் இவர் நூலைப் படிக்கும்போது நாம் ஆழ்ந்து சிந்தித்துப் போற்றவேண்டிய பற்பல எண்ணங்களை அவர் நூலில் நன்கு பொழித்திருக்கிறார். "ஆகவே நாவலர் நூல்களுக்கு உரைகாணு முயற்சியில் சிறந்த வெற்றி கண்டதால், தமிழகம் அவரை "உரை வேந்தர்" என்றும் 'வசன நடை கைவந்த வள்ளலார்' என்றும் போற்றிப் புகழலாயிற்று. அவர் உரையாசிரியராகமட்டுமன்றி, பதிப்பாசிரியராகவும் விளங்கும் பெருமதிப்புப் பெற்றுர்." (பக்கம் 59;) "அவர் வாழ்ந்தகாலத்தில் உரை மன்னராக விளங்கும் தகுதி நாவலர் ஒருவருக்கே இருந்தது என்னலாம். இவ்வளவு உரைநடை நூல்களையும் நன்கு கற்ற நாவலர் யாவரும் புரிந்துகொள்ளும் தன்மையில் உரை எழுதி ஒரு புதிய பாதையை வகுத்துவிட்டார். அவ் வழியில் நாவலர் ஆற்றிய அருஞ் செயல்களை அறிவோம்." பக்கம் (68,69) "அவைக்கண் அஞ்சாது பேசும் ஆற்றலும், எஞ்சாத நூற்புலமையும், எவரும் விஞ்சாது வாதிடும் வன்மையும், செஞ்சொற் செல்வருள் தலைமையும் ஒருங்கே கொண்டு மும்மொழிவாணராய் இலங்கிய நாவலர் இதுகாறும் தமிழகத்துத் தோன்றவில்லை என்று சொல்லலாம்!" (பக்கம் 96) 68ஆம் 96ஆம் பக்கங்களிலிருந்து காட்டப்பட்ட பகுதிகளை இந் நூலாசிரியர் முடிபு செய்யுமுன் உரை நடைபற்றியும் நாவலர் கற்றிருந்திருக்கக்கூடிய நூல்களைப்பற்றியும் சொல்லின் செல்வம் பற்றியும் நீட்டி ஆராய்ச்சி செய்கிறார்.

நாவலர் பெருமையை நம் மெல்லோருக்கும் எடுத்துக் காட்டும் சென்னை உயர் நீதிமன்றத் தலைவராயிலங்கிய திரு. சதாசிவ ஐயரவர்கள் உரைகள், அப்படியே இளம் உள்ளங்கள் சிந்தனைக்குரியனவாக வேண்டும். "நாவலரைப்போல இன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்கள் இல்லை. ஒருவேளை இருந்தாலும் அவரைப்போலத் தமிழ் மொழியையும், நல்லொழுக்கத்தையும், சைவசமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசனநடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உதவி செய்தவர் வேறொருவரும் இல்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப் போல் ஒருவரும் இல்லை" (பக்கம் 85)

இந்த நூலுக்கு இப் பெயர் வந்த காரணத்தை ஆசிரியர் முன்னுரையிலே குறிப்பிடுகிறார். "ஊழி பெயரினும் தாம் பெயராத சான்றாண்மையும் தோலாத நாவன்மையும் ஒருங்கே பெற்றுப் புகழ் நிறுவியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஒருவரேயாம். அப் பெரியார் நாவலர்கள் நடுவண் நாயகமணியாகத் திகழ்ந்த அருமை நோக்கி அவர் தம் வாழ்க்கை வரலாறு 'நாவலர் பெருமான்' என்ற புனைபெயருடன் எழுதப்பட்டது."

நாவலர் பெருமான் மரபு, பேர்த்துக்கேசியருக்கு உணவுக்குப் பசுக்கொடுக்கும் தம்முறை வர அப் பாவச்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம் பார்க்க)




C.C.C. பண்படுத்தும் புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிட்

தபாற்பெட்டி 33 :: :: கொழும்பு.

C.C.C. பசளை கிடைக்குமிடங்கள்:-

சுன்னுகம் — R.M. கான்பாய் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் — M.S. மணியம் அன்ட் கோ

ஊர்காவற்றுறை — கைறஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்

# கேள்வி மண்டலம்

குள்ளனூர்

துள்ளனுருக்குக் கேள்விகள் எழுதி அனுப்புவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடவேண்டும். சொந்தப் பெயர் வெளிவருவதை விரும்பாதவர்கள் புனை பெயர் ஒன்றினைக் குறிப்பிடலாம். ஆனுல் கேள்விகளுடன் உண்மைப் பெயரும் விலாசமும் எழுதி அனுப்புதல் வேண்டும். ப—ர்

சோ. வாமதேவன், கந்தரோடை

கேள்வி: இலங்கை முதலமைச்சருக்கும் இந்திய முதலமைச்சருக்குமுள்ள வித்தியாசம் என்ன?

மறுமொழி: இலங்கை முதலமைச்சர் நட்சத்திரங்களுக்கு மத்தியில் நின்று நடனமாடுவதை விரும்புவதுண்டு. இந்திய முதலமைச்சர் ஒரு நட்சத்திரமாகவே துலங்குகின்றுர்.

கே. குள்ளனூரே! நீர் இந்த நாட்டு முதலமைச்சரானுல்...?

மறு. "பட்டங்க ளான்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்'' என்ற பாரதியாரின் பாடல் அடிகளைச் சிரமேற்கொண்டு மேற்சபைக்குப் பெண்மணிகளையே செனேட்டர்களாகநியமிப்பேன்,

கே. சண்முகராசா, நல்லூர்

கே. நீலக் கடலுக்கு இணையற்ற கடல் எது?

மறு. கருணைக் கடல்

க. சிவலிங்கம், அரசடி, சாவகச்சேரி

கே. பெருமையைப் பெற முடியாத பெண்களாற் பெற முடிவதென்ன?

மறு. குழந்தைகள்!

எஸ். எம். மீரா மோஹிதீன், மெக்கம் வீதி, ஏறவூர்

கே. மிஸ்டர் குள்ளனூரே தங்களைப் பண்டிதக் குள்ளனூர் என அழைக்கலாமா?

மறு. 'சுண்டைக்காய்ப் பேர் வழி' என்று சொல்லலாமே!

கே. பணமில்லாவிட்டால் ஏழைக்கு இன்பமில்லையெனச் சொல்வது உண்மையா?

மறு. பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலகமில்லையென வள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார்.

தவமணி, யாழ்ப்பாணம்

கே. தனது தவறை ஒப்புக் கொள்ளாத மனிதனை என்னென்று சொல்வது?

மறு. தான்தோன்றி மூர்க்கனுர்.

கே. 'புகழேணி' என்று புகழை எதற்காக ஏணிக்கு ஒப்பிட்டுள்ளனர்?

மறு. உயரத்தில் இருப்பதை ஏணியின் தயவின்றி அடைய முடியாது. இந் நாட்களிற் புகழ் பெறுவதற்கும் சில புள்ளிகளின் தயவு கிடைத்தேயாகவேண்டும்.

அ. இராசேந்திரம் மூதூர்

கே. காதலில்லாத கலியாணம், கண்டுபழகாத காதல் என்பவை பற்றித் தங்கள் கருத்தென்ன?

மறு. வெள்ளித் திரையில் அமர்க்களமாக நடைபெறும் திருமணம் போன்றது.

பெ. சீனித்தம்பி, கல்லடி உப்போடை

கே. சில அம். பீக்கள் சிங்களம் தேசிய மொழியானுற் குடி மூழ்கிப் போக... தெனக் கூக்குரல்... தேன்?

மறு. இது கூலிக்... க்கும் வேலை, அத்து... வெளுத்துத் போ... யல் வாதிகள் சிலர், ... தாழ்வுற்றுலும் தமக்... உயரவேண்டுமென... டனிட்டுப் பாடும் ...

க. கருணகரன், ...

கே. சில கே... பொழுது குறி... ருப் பூசை நட... தேன்?

மறு. கூப்ப... கற்களை நீக்கி... அதிகநேரம்

மட்டக்களப்புத் தமிழகப் புலவர் பரம்பரை — 9

# சேகுமதாறுசாகிப் புலவர்

## பண்டித, வி. சீ. கந்தையா

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இனிமைசெறிந்த சொற்கள் பலவற்றைக், குறைந்த எழுத்துக்களாற் படைத்துக் கவிதை புலகுக்கோர் சிறப்புத்தந்த பெருமை பழங்காலத்துப் புலவர் பெருமக்களுடையது. தமிழின் இனிமையினைக் காட்டும் அவ்வாறான சொற்கள் பயின்ற செய்யுள்களுக்கு எடுத்துக்காட்டுகள் வேண்டின், நாம் பண்டைய இலக்கியங்களைத் தேடி நிற்றலே பெருவழக்கம். இந்நிலையில் சேகுமதாறுசாகிப் புலவர் அவர்களுடைய 'ஒருபா ஒருபஃது' என்னும் நூல் உருது மொழிகலந்த மதப்பண் புரைப்பதாயினும் இனிய தமிழ்க் கவிதை நிறைந்த ஒன்றாய் இருப்பதை அறியும் போது அனைவரும் வியப்படைதல்கூடும்.

"முண்டகத்தின் பூவே
முழுமதியே முச்சுடரே
அண்டர் கருவே
யருமருந்தே 'ஆணிமுத்தே
மண்டலவிசர் போற்றும்
மருக்கொழுந்தே என்னு [டைய
கண்டமதின் நோய்துடை [ப்பீர்
காதிர் சுமீதொலியே"

என்பது அந் நூலிலுள்ள இனிய பாடல் பலவற்றுளொன்று. சுமீதொலியினுடைய பேருளை நோக்கிய புலவரது வேண்டுகோள், அன்புப்பெருக்கு என்பவற்றின் உயர்நிலையினை நன்கு காட்டுவது இச்செய்யுள். "முண்டகத்தின்பூவே" என்று ஒப்புவமையில்லாத திருமலரொன்றுக்கு அருளடிகளை ஒப்பிடுதல் மூலம், புதியதொரு உவமையைக் கவியுலகிற்குப் புகுத்தும் சாகிப் அவர்களது புலமைபோற்றத்தக்கதாகும். இனிய நல்ல செஞ்சொற்களாலே இலகுவான உவமைகளையும் சேர்த்தமைத்துத் தமிழ்க் கவிதையினையும், தமது புலமை நலத்தினையும் சாகிப் அவர்கள் இந்நூலில் வளம்செய்துள்ளார்கள். இத்தகைய உயர்ந்த கவிதைகளைப் படைக்கும் ஆற்றல் அருட்கவிஞர்களையன்றி மற்றையோரிடம் இலகுவில் அடைதல்கூடுமா!

தமிழ்க் கவிகள், நிறைந்த நன்றி உள்ளம் படைத்தவர்கள். தம்மை ஆதரித்த புரவலர்பால் நன்றிமறவாது, தருணம்கிடைக்கும் போதெல்லாம் அன்னாருடைய புகழையும், பெயரையும், அழியாத கவிதைவடிவிற் பொறித்து வைத்தல் கவிஞர்களுடைய தமிழுள்ளம்செய்யும் கைம்மாறாகும். இந்தச் சிறந்த வழக்காற்றினைச் சேகுமதாறு சாகிப் அவர்களும் அங்ஙனம் கடைப்பிடித்துள்ளார்கள். வறுமை நிலையில் வாடிய இவரைத் தளராநிலை கூட்டிய கலந்தரு மரைக்காரும், காதிர்முகைதீன் சாகிபு மரைக்காரும், இவராற் பெரிதும் புகழ்ந்தேத்தப்பட்டுள்ளனர். அச்செல்வர்களுடைய பெயர் வாழும் பல தனிப்பாடல்களும் இப்புலவர் வாயினின்றெழுந்து இங்கு நிலவுகின்றன.

"அனம் பயில் வாவி
[வளம்பல சூழும்
அக்கரைப் பற்றெனும்
[நகரில்
கனக நிகர்கரத்திற் கலந்தரு
[மரைக்கார்
காதிர் முகியித்தீ னுடனே
தனமிகப் பெருகும் சாகிபு
[மரைக்கார்
தனக்குமின் னேன்மனை
[யார்க்கும்
தினமருட் பதமீந் தென்னை
[ரட்சிக்கும்
திருநபி ஜகத்தில்வந்
[தனரே

என்பது அவ்வாறான பாடல்களுள் ஒன்றாகும்.

இவற்றைவிட 'புசல்க்காவியம்' 'பிள்ளைக்காவியம்' என்னும் தொகுதிகளா யமைந்த பாடல்கள் பலவும் இவர் நாவினின்றெழுந்துள்ளன. 1907 ஆம் ஆண்டு பங்குனிமாதம் கிழக்கிலங்கை என்றுமே கண்டிராத பெரும் புயலொன்று இங்குவீசிற்று. அதனோடு பெருமழை, கரைகடந்த வெள்ளம் என்பவற்றால் நாடு அடைந்த சேதமும், மக்கள் அடைந்த துன்பமும் எல்லையிறந்தன. இவைகளை விவரித்த சொல்லோவியம் நிறைந்தது 'புசல்க்காவியம்' பிள்ளைப்பேறு கிடையாத மங்கை ஒருத்தி ஆண்டவனருளை அதற்கு வேண்டுவதாய் அமைந்த நூல் 'பிள்ளைக்காவியம்' ஆகும். இவ்விரண்டு காவியங்களும், மக்கள் நாவில் அழியாது நிலவுவன. பின்னையது நிறைந்த சொல்நயம், பொருள்நயம் உடையது. சங்கிலிக் கோவையாய் அமைந்த இதன் பாடல்களை இசையுடன் ஒருவர் பாடும்போது பக்கம்நின்று கேட்டோருக்கும் மனம் உருகிவிடும். அந்த உயரிய தன்மையினோடு நிறைந்த பொருட் பயனையும் அப்பாடல்கள் தருதலினாற் போலும் 'பிள்ளைக்காவியம்' பொது மக்களிடைப் பெரிதும் பரவியிருக்கும் ஒருநூலாயிருக்கின்றது.

அவர் மறைந்து விட்டாலும், தமது புலமைப் புகழ் முஸ்லீம் மக்களிடை யிருந்து மறைந்தொழியாது வாழச்செய்யும் வல்லமை வாய்ந்த உயிர்க் கவிதைகளைப்படைத்தளித்த பெருமையாளர் சேகுமதாறுசாகிப் அவர்கள். அன்னாரது கவிதைகளனைத்தினையும் தொகுத்து வெளியிடுசெய்யின், அது ஒரு சிறந்த தமிழ்ப் பணியாக நிலவுறுவதாகும்.

# ஈழத்துப் பேனமன்னர்கள்—34

# மா. பீதாம்பரம்

இக்காலத்தில் வெளிவரும் எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் கவிதைகள் ஒன்றோ பலவோ இருந்தேதீரும். அதிலும் பாலர் பகுதியில் அவர்களின் மன இயல்புக்குத் தக்கதான கவிதைகள் இருப்பதையும் நாம் காணலாம். ஏன்? சிறுவர்களுக்கென்றே 'ஜில் ஜில்' தொடக்கம் 'அம்புலிமாமா' வரை எத்தனையோ பத்திரிகைகளை வெளியிட்டும் வருகிறார்கள். ஏறக்குறைய இருபது வருடங்களுக்கு முன் "பனைமரமே" 'குண்டுடுக்கி குடுகுடுக்கி' இவற்றை வைத்துக்கொண்டுதான் ஆசிரியர்கள் காலந்தள்ளினார்கள், மாணவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். இந்த நிலையைக் கண்ட அப்போதைய வட-பெரும்பாக வித்தியாதரிசி திரு. க. ச. அருணந்தி அவர்கள் நல்ல குழந்தைப் பாடல்கள் தேவையென்றும் அப்படிப் பாடுபவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் கூறி உற்சாகப்படுத்தினார்கள். இந்த உற்சாக வெள்ளத்திலே ஆசிரியர் பலர் போட்டிபோட்டு நீந்தினார்கள். ஏராளமான கவிதைகள் இயற்றினார்கள். சுவாமி விபுலாநந்தர், பண்டித கே. மகாலிங்கசிவம், நவநீதகிருஷ்ண பாரதியார், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலியோர் பாடல்களைத் தரம் வகுத்துப் பரிசுக்குரியவற்றை வெளியிட்டார்கள். முதலாம் படிவத்துக்குரிய பாடல்களில் (16 பாடல்கள்) முதலாம் பரிசையும், இரண்டாம படிவத்துக்குரிய பாடல்களில் (15 பாடல்கள்) இரண்டாம் பரிசையும் பெற்றுக்கொண்டவர்தான் மா. பீதாம்பரம். அவர்களாவர்.

1935ஆம் ஆண்டு வெளிவிட்ட 'பிள்ளைப் பாட்டு' என்ற அந்த நூலிலே ஆலமரம், பழத் தட்டம், பந்தாட்டம், அணிற்பிள்ளை, அம்புலி, கடவுள் வாழ்த்து, எங்கள் இலங்கை, காலை வணக்கம், சின்னஞ் சிறு குருவி, தென்னை, கிளி, வானவில், வள்ளலடிக்கேற்ற மலர், வெண்ணிலா, தாய்மொழி முதலிய பாடல்கள் நன்றாக இருக்கின்றன. இவைமாத்திரமன்றி இலங்கைச் சரித்திர சம்பந்தமான இலங்காதேவி, விஜயன் கதை, பந்துகாபயன் கதை, தேவநம்பியதீசன் வாழ்த்து, துட்டகைமுனு, எல்லாளன் கதை என்பனவும் மாணவர்க்கு ஏற்றவிதமாக அமைந்திருக்கின்றன. பாலர்களுக்கு மாத்திரம் பாட்டியற்றக்கூடிய சக்திவாய்ந்தவர்தான் பீதாம்பரம் என்று நீங்கள் எண்ணினால் நிச்சயம் ஏமாந்துபோவீர்கள். விவேகானந்தர்மீது பதிகம் ஒன்றை மிகப்பழைய பந்ததியிலே அவர் (1923இல்) பாடியுள்ளார். 1923, 1935 இவற்றோடு தம் கவிதை முயற்சியை நிறுத்திவிடாமல் 1955இல மிகமிகப் புதுமையாக இலங்கை வானொலியில் மன்மத வருடப் பிறப்பன்று நடைபெற்ற கவியரங்கத்திலே அழகு என்பதை அவர் வெளியிட்டார். இவைமாத்திரமன்றி, விபுலாநந்தர் பற்றிய கவிதை தொன்மாவிலங்கை, திகழு ஈழத்திரு நாடு, ஈழகேசரி ஆண்டுமடல் வருகை என்பன பற்றியும் அழகுறப் பாடியுள்ளார்.

"வையகத்தும் வானகத்தும் வளரழகை வடித்து
மலரகத் தன்புருவாக வைத்தமணி விளக்கை
செய்யுளிடைச் சிறந்தொளிரும் செம்பொருளை ஞானத்
திருவுருவைச் சிந்தைதனிற சேர்த்துவணங் கிடுவேம்"

என்று அழகு என்ற அவரது கவிதை அழகாகவே தொடங்குகிறது. அழகு எங்கெங்கே எவ்வண்ணம் காட்சி அளிக்கிறது என்பதைப் பலபடியாக அவர் தொட்டுக் காட்டிய ஒரு அருமையான இடத்தைப் பாருங்கள்.

கற்பகத்தின் பூங்கொம்பைப் பரவையிடைக் கண்டு
கவினிலங்கு திருப்பாட்டுக் கண்டபுகழ் நம்பி
'பொற்புடைய புண்ணியமே' சிவனருளே! என்றூர்
பொங்கிவளர் புதுவனப்பின் பூரணத்தைக் கண்டார்.

பன்னிரண்டு அழகிய பாடல்களால் இயற்றப்பட்டுள்ள இந்த 'அழகு'க் கவிதையை முடித்திருக்கும் அழகு அழகுக்கழகு செய்வதாயிருக்கிறது.

கலைவனப்பிற் காவனப்பிற் கதிரவன்றன் வனப்பில்
.............. .............. .............. ..............
மலைவனப்பில் மதிவனப்பில் மாமயிலின் வனப்பில்
மாங்குயிலின் இசைவனப்பில் மன்றலர்த்தண் தென்றல்
அலைவனப்பில் அந்திவண்ணன் அருள்வனப்பில் ஆடல்
அபிநயத்தில் அரவிந்தத் திருவடியின் அழகில்
விலைமதிக்க வொண்ணாத விண்ணகத்தின் வனப்பில்
விளங்குமழ கெனுமரசி! வீற்றருள்என் னகத்தே.

என்று முடித்திருக்கும் அழகு இரசிக்கக்கூடியதே.

திரு. பீதாம்பரம் அவர்கள் இராமகிருஷ்ணரிடத்தும், சுவாமி விவேகானந்தரிடத்தும் மிகுந்த பற்றுக்கொண்டவர். மிக இளமைக்காலத்திலேயே (1923இல்) விவேகானந்தர்மீது பதிகம் ஒன்று பாடி 'ஸ்ரீ ராமகிருஷ்ணவிஜயம்' என்னும் பத்திரிகையில் வெளியிட்டார். அப்போதே, ஒரு கவிக்குரிய அம்சங்கள் அவற்றில் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

சீர்பெற் றிலங்குசிவ ஞானவொளி குன்றியே
சிவநிந்தை யுறுசெவியர் மேற்
சின்மய சிவானந்த சிற்சொரு பந்திகழ்
சிவமொழி பகர்ந்து மேலாம்
பேர்பெற் றிலங்குபதி பசுபாச சம்பந்த
பேதந் தெரிந் துரைத்துப்
பேரின்ப வெள்ளத்தை யூட்டியே சாந்தகுண
பீடமென நின்ற நிமலா
கார்பெற் றிலங்குபூ தலமெலாஞ் சென்றுறிக்
காரிருள் அகற்றி ஞானக்
கருணைப் ப்ரவாகந்தி யூறிடுங் கிரியன்ன
காட்சிதரு மெழில விளக்கு

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)

திருக் குர்ஆன் தெளிவுரை

# இன்பமும் துன்பமும்

## அ. க. ரிபாயி, பி. ஏ.

மனிதப் பண்புகளைச் செம்மைப்படுத்தி பக்குவமடையச் செய்யவே, இடுக்கண்களும் இக்கட்டான நிலைமைகளும், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நிகழ்கின்றன. இது ஒரு சித்தாந்தம். பலருக்கு இது பிடிப்பதில்லை. ஏன், விளங்குவதில்லை.

இன்பமும் துன்பமும் ஒன்றோடொன்று இணைந்தவை; ஒளியும் அதன் நிழலும் போல. உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாமலும் இக்கட்டான கட்டங்களில் கோழையாகி விடாமலும் பக்குவ நிலையை அடைந்தாலொழிய, மனிதன் சிறப்புக்குரிய காரியங்களைச் சாதிக்க இயலாது. கஷ்டப் படாமல் நாம் விரும்பியபடியே வாழ்வதற்கு வழி ஏதாவது இருக்கிறதா? அப்படி இருக்கும் பட்சத்தில் இந்த சித்தாந்தத்திற்கு வேலையே இல்லை தான். ஆனால், நடைமுறையில் என்ன காண்கிறோம்? எவ்வழியில் போனாலும் எதிர்ப்புகள்தான் முன்னிற்கின்றன. அவற்றைச் சமாளித்து வெற்றிகாண நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நம்முடைய நன்மைக்குத்தான் சோதனைகளுக்குள்ளாகிறோம். உள்ளதை உள்ளபடி நோக்கினால் இது புலனாகும்.

"நிச்சயமாக கஷ்டத்துடனே சுகமும் இருக்கிறது, கஷ்டத்துடனே சுகமும் இருக்கிறது" என்று திருமறை கூறுகிறது. சுகமும் துக்கமும் மாறிமாறி வரக் காண்கிறோம். இரண்டையும் பிரிக்கமுடியவில்லை,

கஷ்டங்கள் வராதிருக்க வேண்டுமானால் இவ்வுலகபந்தங்களை ஒதுக்கித் தள்ளுங்கள், மாயவலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள், அப்பொழுதுதான் தொல்லை ஒழியும், நிரந்தர இன்பம் பெறலாம் என்று ஒருசாரார் பரிகாரம் சொல்கிறார்கள். காடுகளுக்குச் சென்று துறவறம் பூண்டாலொழிய இன்னல்கள் ஒழியாது என்று எண்ணுகிறார்கள். துன்பமே உருவான மாய உலக வாழ்க்கையிலிருந்து விமோசனம் பெற வேண்டுமென்றால் "தன்னை ஒறுத்தல்" ஒரேவழி என்கிறார் புத்தர் பெருமானும். துறவை மேற்கொண்டதாலும் தன்னை ஒறுத்து விட்டதாலும் விமோசனம் கண்டுவிட்டோமா?

உலக சரித்திரத்தில் என்ன பார்க்கிறோம்? ஏகாந்தமே இனிது என்றவர்கள், உலகமே மாயை என்றவர்கள், நாடுபிடித்தார்கள் சாம்ராச்சியங்களை அமைத்தார்கள், அரசுசெலுத்தினார்கள் என்பதைப் பார்க்கிறோம். "தன்னை" அழிக்கக் கங்கணம் கட்டியவர்களும் இவ்வுலக வாழ்க்கையை விரும்பினார்கள், பொருள் திரட்டினார்கள், அதிகாரம் செய்தார்கள், படைதிரட்டினார்கள், போர் செய்தார்கள், வெற்றியும் கண்டார்கள். இது சரித்திரம். சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமெங்கே, பாருங்கள்! இதிலிருந்து கற்கவேண்டிய படிப்பினை என்ன? நடைமுறைக்கு ஒவ்வாதவை இவை என்பதுதானே? அக்கோட்பாடுகளைப் பின்பற்றிய மக்களே அதைநிரூபித்து விட்டார்கள்.

சங்கடம் ஏற்படும் பொழுது அதை எதிர் நோக்கி சமாளிக்கும் தைரியம் வேண்டும். ஆபத்தைக் கண்டவுடன் ஓலமிட்டால் அது ஒதுங்கிவிடுமா? ஆபத்தச் சமயங்களில் தடுமாறுகிறவர்களே துறவுபற்றியும் தன்னை வாட்டுவது பற்றியும் பேசுவார்கள். ஏதேதோ கற்பனை செய்து கொண்டு தப்பிதமான முடிவுகளுக்கு வந்து விடுகிறார்கள். இவர்கள் ஒரு சாரார்கள்.

மேலை நாடுகளில் வேறு விதமாக நடப்பதைப் பார்க்கிறோம். பொருள் திரட்டுவதே வேலையாக வைத்திருக்கிறார்கள், லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் செல்வத்தைச் சேகரிப்பதே மனிதனின் ஒரே கடமையா? இதைத்தவிர வேறு குறிக்கோள் அவனுக்கு இல்லையா? மதம் போதிப்பதையும் ஒருபுறமாகத் தள்ளிவிட்டு அக்கிறிஸ்தவ நாடுகள் பணக்கார நாடுகளாவதிலேயே மூளையையும் பலத்தையும் விரயம் செய்கின்றன. சரி இருக்கட்டும், இதன் மூலமாவது அவர்கள் மனச்சாந்தி பெறுகிறார்களா? துன்பங்களினின்றும் விடுதலை பெறும் பரிகாரத்தைக் கண்டு விட்டார்களா?

மேலே கூறியதுபோல, இவர்களும் சோதனை எதிர்ப்படும் பொழுது கோழைகளாகவே ஆகிவிடுகிறார்கள், சுகமாக இருக்கவேண்டும், சகல விதமான சௌகரியங்களையும் நுகர வேண்டும், என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பவர்கள் ஆயிற்றே, எப்படி இன்னலைப்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்பார்க்க)



## ஊர் வதந்தி

❖ ❖ கொண்டோடி ❖ ❖

● காதல் உலகிற் சஞ்சரிப்பவர்கள் கடைசியிற் கலியாணமும் செய்துகொள்வார்களாம்.

○ இப்போது தேர்தல் உலக வாழ்வில் ஊக்கம் காட்டுபவர்களுக்கும் கலியாணம் அவசியமாகி விட்டதாம்.

○ அடுத்த பொதுத் தேர்தலிலும் கலந்துகொள்ள ஆசைப்படும் ஒருவயோதிப எம். பியும் இந்த அவசியத்தை நன்கு உணர்ந்து அதில் ஆர்வங் காட்டக் கூடுமாம்.

● விலைபொருட் சங்க நிர்வாகிகள்மீது கடிதப்போர் நடத்துவதிலும் சிலர் ஆர்வங் காட்டுவதுண்டாம்.

○ அத்தகைய ஆர்வமுள்ள ஆங்கிலப் பட்டதாரிகளுக்குப் பதிவாளர், பதிவுடாப்பு என்பவற்றைக் குறிப்பிடும் ஆங்கிலப் பதங்களுக்கு அர்த்தமே தெரிவதில்லையாம்.

● அர்த்தமில்லாத சரடொன்று இப்போது கிழக்கு மாகாணத்துப் பிரதிநிதிகளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறதாம்.

○ அவர்களது அரசாங்க மொழிக் கொள்கைபற்றிக் கிளப்பப்பட்ட அந்த அபத்தச் செய்தி ஆழம் தெரியாமற் காலை விட்ட எம். பி. ஒருவருக்கு ஆபத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறதாம்.

○ பட்டிருப்புப் பிரதிநிதியின் பகிரங்க அறிக்கையானது காலை விட்டவர் யார் என்பதைக் காட்டிக்கொடுத்து விட்டதாம்.

● காட்டிக் கொடுத்தாலும் கைலஞ்சத்தால் சமாளிப்பவர்கள் காரியம் தெரிந்த அரசாங்க ஊழியர்களாம்.

○ சமாளிப்பில் இறங்கிப் பதவியையும் பறிகொடுக்க நேர்ந்தவர் கொழும்பு நகரில் குஷாலாக வாழ்ந்த குமாஸ்தா ஒருவராம்.

○ பலநாள் அனுப்பிச் சமாளித்தவர் ஒருநாள் அகப்படுவார் என்பது உண்மை மிக்க உணர்ச்சி வாசகமாம்.

● பெரிய இடத்துச் சிண்டுபிடி சண்டைகள் திரைக்குப் பின்னால் மறைந்து விடுவது இயல்பான ஒரு காரியமாம்.

○ தன் சண்டித்தனத்தைக் காட்டித் திருத்த பாடம் படித்துச் சென்றவர் தலத்தாபனப் பகுதியின் பரிசோதனை ஊழியராம்.

○ அவருக்குப் பாடம் படிப்பித்து மரியாதை எதுவென்று உணர்த்திய பெருமை சுகாதாரப் பரிசோதகர் ஒருவரைச் சாருமாம்.

● பருத்தித்துறைப் பஸ் கம்பனி நிர்வாகிகளுக்குப் 'பொதுசன சேவை' என்ற பாடத்தைப் பொலிஸ் பகுதி அதிகாரியொருவர் போதித்து வருகிறாராம்.

○ பாடம் பலமாயிருப்பதால் பஸ் வண்டிகளின் தொகையை அதிகரிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளதாம்.

○ அவசியமில்லாமல் ஆட்களுக்கு அடிப்பதில் தீவுப்பகுதியில் வேலையாற்றும் சில பொலீசார் நிபுணர்களாம்.

● அடிபட்ட கைகளால் ஒருநாளைக்கு அவதிப்படவும் நேரிடுமாம்.

● அந்தக் கைகள் தீட்டிய புகார்மனுவொன்று பொலீஸ் தலைமை அதிகாரியை நோக்கிப் புறப்பட்டுவிட்டதாம்.

○ சாட்சிக் கையொப்பமிட்டுக் கைலஞ்சம் பெறும் யாழ்ப்பாணக் கச்சேரி ஊழியர் சிலர் இப்போது கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கிறார்களாம்.

★ அவளின் அன்பும் பண்பும் என் உள்ளத்தைக் கவர்ந்து இழுத்தது. என் தங்கை இல்லாத குறையை அவள் நிவர்த்திசெய்தாள்.

# வாழ்வில் ஒளி

என் தெய்வமே......நீங்கள்தான் என் கண்கண்ட கடவுள். இவ்வளவு காலமும் இந்த ஏழையை ஆதரித்தீர்கள். அவளின் உயிர் இன்று ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. என் அன்புக் கண்மணி அழகனுக்காகவாவது நான் உயிருடன் இருக்க ஆசைப்படுகின்றேன். ஆனால் என்ன செய்வது...! எவ்வளவு போராடினாலும் நான் இனி வெகுகாலம் உயிருடன் வாழ முடியாது. அழகன் ஏங்கியபடியே இருக்கின்றான். அவனின் ஏக்கத்தைப் போக்க உங்கள் ஒருவரால்தான் முடியும். தயவுகூர்ந்து உடன் புறப்பட்டு வரவும். இதற்குமேல் என்னால் ஒன்றும் எழுத முடியவில்லை......

பார்வதி

## சிறுகதை

கடிதத்தைப் படித்தேன். கண்கள் இருண்டன. என் நினைவு பின்நோக்கி நகர்ந்தது. 'எப்படியும் உடன் புறப்படத்தான் வேண்டும். பாவம்.... நான் போகாவிட்டால் அவளுக்குவேறு யார ஆதரவு. பார்வதியின் வறண்ட வாழ்க்கையிற் பசுமை உண்டாக்க எத்தனித்தேன். ஆம், சிறிது பசுமை தென்பட்டான்செய்தது. ஆனால், பசுமை நிலைக்கவில்லை. இன்னமும் சில மணி நேரத்தில் அப் பசுமை வரண்ட பாலையாகப் போகின்றது. அதன் பின் ஒரே வரட்சிதான். நான் எதிர்பார்த்த அளவுக்குப் பசுமை தோன்றவே தோன்றாது. பார்வதி! நீ ஏழைதான். ஆனால் உன் பண்பு, பாசம் அதற்கு நிகர் நீயேதான்.

❖ ❖ ❖

இரண்டு வருடங்களுக்கு முன்.......

நான் யாழ்ப்பாணத்திலுள்ள கம்பெனி ஒன்றில் லிகிதராகவிருந்தேன். என்சுகதுக்கங்களிற் பங்குகொள்ள என் அன்னையைத் தவிர வேறொருவருமில்லை. நான் ஒரே மகன் என்பதால் என் அன்னைக்கு என்மேல் அளவற்ற அன்பு. எனக்குத் தலைவலி என்றால் கூடப் பொறுக்கமாட்டாள். புழுப்போல் துடித்துவிடுவாள்.

ஒருநாள் மாலை, என் கம்பெனி அலுவல்களை முடித்துக்கொண்டு வீடு திரும்பினேன். ஆகாயம் இருண்டுகொண்டே வந்தது. பெருமழைக்கு வேண்டிய அறிகுறிகள் தென்பட்டன. பிரயோசனமில்லை. வீடு சேர முன் தொப்பலாக நனைந்துவிட்டேன். "நல்ல பிள்ளையடா நீ, மழையில் இப்படி நனைந்தால் உடம்பு என்னத்திற்கு உதவும்! மழை விட்ட பிறகு வந்தால் என்ன? உம்; சீக்கிரம் போய் உடையை மாற்றிக்கொள்" என்று அன்புடன் கடிந்து கொண்டாள் என் அன்னை.

உடையை மாற்றிக்கொண்டேன். மழையில் நனைந்ததாலோ என்னவோ தலை இலேசாகக் கனத்தது. இவற்றை அம்மாவுக்குச் சொல்லக்கூடாதென்று மெதுவாக விறாந்தையிலிருந்த நாற்காலியிற் சாய்ந்துகொண்டேன்,

"அம்மா! பசிக்கிறது!" ஒருசிறுவனின் அழும் குரல்.

"அழாதேடா என் ராஜா. கொஞ்சம் பொறடா. மழை விட்டவுடன் எங்காவது போய் உனக்கு உணவு வேண்டித் தாறேன்" ஒரு பெண்ணின் விம்மும் குரல்.

சரேலென்று எழுந்து கதவைத் திறந்தேன். ஒரு பெண் உடம்பெல்லாம் மழை நீர் சொட்டச்சொட்டக் கதவோரத்தில் ஒதுங்கி நின்றாள். சிறுவன் ஒருவன் அவளின் கால்களை அணைத்தவாறு நின்றான். அவள் முகத்தை நோக்கினேன். என் தங்கை என்முன் நிற்பது போன்ற ஒரு நினைவு. 'ஆம், என் தங்கை. அவள் இன்று உயிருடனிருந்தால் இவளைப் போலவே இருப்பாள். அவ்வளவு வித்தியாசம் காண முடியாத ஒரே சாயல். அதற்குத்தான் நான் கொடுத்து வைக்கவில்லையே!' என் உள்ளத்தில் விபரிக்க முடியாத ஒரு பரிவு. "பாவம்! இப்படி நனைந்துவிட்டாயே, உள்ளே வா!" என்றேன்.

என்னுடைய குரலைக்கேட்டுவிட்டு அம்மாவும் வந்துவிட்டார். "அம்மா! இவளைப் பாரேன். எங்கள் கமலாவின் சாயல், இல்லையா?"

"ஆமடா, அவள் இன்று இருந்தால் இவளின் பருவம் தான் அவளுக்கும் இருக்கும்." அம்மாவின் கண்கள் கலங்கின.

என் அன்னை வேறு உடைகள் கொண்டுவந்து கொடுத்தார். சிறுவனும் அப்பெண்ணும் உடுத்திக்கொண்டார்கள். சிறுவனின் 'பசிப்பாட்டு' இன்னமும் ஓயவில்லை. நான் ஓர் இலையிற் சோறு கொண்டுவந்து கொடுத்தேன். இருவரும் அவாவுடன் உண்டனர். அப்பொழுது அப்பெண்ணின் கண்ணிற் தோன்றிய நன்றிப் பெருக்கையும் நன்றியுணர்ச்சியையும் இன்றுகூட என்னால் மறக்க முடியவில்லை.

"அம்மா, நீ யார்? உன் பெயர் என்ன? ஏன் இப்படி மழையில் புறப்பட்டு வந்தாய்? இவன் உன் மகன் தானே?" என்றேன்.

"ஆமாம்! இத் துர்ப்பாக்கியம் செய்தவளின் மகன் தான் இவன்—அழகன்—என் பெயர் பார்வதி. என் புருசனுக்குக் காங்கேசன் துறையிலுள்ள சீமேந்துத் தொழிற்சாலையிற் கூலிவேலை. அன்றும் இப்படித்தான் மழை பெய்தது. பலநாட்களாக நோயினால் கஷ்டப்பட்ட உடம்பு மழையில் நனையக்கூடாதென்று அவரை வேலைக்குப் போகவிடாது தடுத்தேன். ஆனால் அவர் கேட்கவில்லை. மழையில் நனைந்துகொண்டேபோனார். நனைந்துகொண்டே திரும்பியும் வந்தார். வந்தவர் ஒரு மூலையில் சுருண்டு விழுந்தார். உடல் பனிக்கட்டிபோல் குளிர்ந்தது. உடல் எல்லாம் ஒரே நடுக்கம். பின் அவர் எழுந்திருக்கவேயில்லை..."

கண்ணீர் பெருக்கெடுத்து அவள் மார்பகத்துச் சேலையை நனைத்தது. ஆழ்ந்த ஒரு பெருமூச்சு. அப்பெண் மீண்டும் தொடர்ந்தாள்......

## மணி

"அப்பொழுதாவது மழை ஓய்ந்ததா? அதுதான் இல்லை. சகல உயினங்களுக்கும் புத்துயிர் அளிக்கும் மழை அன்று ஏனோ பழிவாங்கத் திட்டமிட்டு விட்டது. வெள்ளம் கரைபுரண்டோடியது. எங்கு பார்த்தாலும் ஒரே வெள்ளக் காடு. அந்தப் பெருவெள்ளத்தில் என்குடிசையும் மூழ்கியது. என்னையும் இச்சிறுவனையும் கவனிக்க ஒருவருமில்லை. இருக்கக் குடிசையுமில்லை. இவ்வளவு கஷ்டத்தில் நான் என்ன செய்வது. என் விதியை நொந்தபடியே இவனையும் கையிற் பிடித்துக்கொண்டு வீடுவீடாக ஏறி இறங்குகின்றேன். ஐயா! உங்களைப்போன்ற கருணையுள்ளம் படைத்தவரை இன்றுதான் நான் முதன் முதலாகச் சந்திருக்கிறேன். இவ்வுலகில் என்னை ஆதரிப்பார் எவருமில்லை...." விம்மலுக்கிடையே இவ்வளவையும் சொல்லி முடித்தாள் பார்வதி.

அவளின் சோகக் கதையைக் கேட்கக் கேட்க என் தங்கை என்முன்நின்று இறைஞ்சுவதுபோன்ற ஒரு பிரமை. உள்ளம் சோகத்தில் தத்தளித்தது. "பார்வதி, நீ ஒன்றிற்கும் வருந்தாதே. உன்னை என் வீட்டில் வைத்திருப்பதற்குத் தீர்மானித்துவிட்டேன். நான் வேலைக்குப்போகும் நேரங்களில் அம்மாவுக்குத் துணை ஒருவருமில்லை. நீ அவருக்கு ஒத்தாசையாகவிருக்கலாம். அழகனும் உன்னைப் பிரியாது

(தொடர்ச்சி 5ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை எழுத்தாளருக்கு:

இனிமையான சிறுகதைகளை ஈழகேசரி வரவேற்கின்றது. கதைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். இப் பத்திரிகையின் ஒரு பக்கத்தில் (5 பத்தி) அமையும் கதைகள் சிறப்பாகக் கவனிக்கப்படும். கதைகளின் தகுதி பற்றி எவ்வித கடிதப் போக்கு வரவும் வைத்துக்கொள்ளப்படமாட்டா. போதியளவு முத்திரை சேர்த்தனுப்பினாலன்றி ஏற்றுக்கொள்ளப் படாத கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

## நமது வாசிகசாலை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

செவலுக்கு உட்பட மறுத்து யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியாகிய ஊரை விட்டு ஓடிய பெருந் துறவியும், வடதென் மொழிகளிலும், சித்தாந்த சாஸ்திரத்திலும் மிக்க வல்லுனரும் ஆகிய ஞானப்பிரகாசர் மரபாகும். அம் மரபு மருத்துவக்கலையிலும் தலைசிறந்ததாயிருந்ததனாற் போலும் நாவலர் பெருமான் சைவர்களுக்கு ஆத்மீகத் துறையிலேற்பட்ட மந்தத்திற்கும நல்ல மருந்து தந்து சென்றருளினார்.

சைவ வளர்ச்சிக்கோ நாவலர்பெருமான் அளப்பரும் தொண்டுகள் செய்தார். பிழையற அவர் இலக்கிய இலக்கணக் கருவி நூல்களையும் சைவநூல்களையும் பதிப்பித்தார். சமயசாஸ்திரத்தை விளங்குதற்கேற்றபடி நூல்களையும்தாமே எழுதினார். யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றிச் சிதம்பரத்திலும்அவர் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை வருங்காலச் சந்ததிக்கு சைவத்தையும்தமிழையும் தம் இரு கண்களாகக் கொண்ட நாவலர்பெருமான் நற்றொண்டின் சிறப்பை நன்றே காட்டும். நாவலர் பெருமான் நற்பண்பை இந்நூலாசிரியர் காட்டும்வகையில் நாம் காண்போமாக, "'கல்விக்கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்பது நன்மொழி. நாவலர் மும் மொழியும் கற்றவர்; சித்தாந்தச் செம்மல்; இலக்கண ஏறு; உலகியல் வல்லுனர்;பேரவை வியக்கும் பெருநாவலர். அவர் கற்ற நூல்கள் கணக்கில. கற்றவற்றை நன்கு உணர்ந்தவர். உணர்ந்ததை உளத்தே அமைத்தவர். செருக்கு வீறிட்டெழாவண்ணம்அடக்கியாளுந் தன்னடக்கமுடையவர்.இந்தப்பண்பு முற்றத்துறந்தமுனிவர்க்கும் கைவரப்பெறல் அரிது.'"

நாவலர் மீதுகொண்ட ஆரா அன்பால் தெள்ளத்தெளிந்த உயர்தரமான தமிழ்நடையில் இப் பெரியார் எழுதியுள்ள இந்த நூல் பெரியோர்களைப் போலவே பாடசாலை மாணவருக்கும் பெரும் நன்மை பயக்குந்தன்மை வாய்ந்தது. தமிழ் நாடு இந்நூலாற் பெரிதும் பயன்பெறுக!

—போ. கி.

●

**உடலறி விளக்கம்** :—வெளியீடு: வைத்திய சிகாமணி திரு. கா. நமசிவாயம், கொட்டடி, யழ்ப்பாணம். விலை: சதம் 50.

இந் நூல் சைவ சித்தாந்த தத்துவங்களை விளக்கிக் குரு சிஷ்யசம்வாதமாக இயற்றப்பட்டுள்ளது. 'அரிசிப்பொதியோடு திருவாரூரும்' என்பதற்கேற்ப இந் நூலை வாசிப்போர் சித்தாந்த தத்துவங்களைத் தெரிந்துகொள்வதோடமையாது உடற்கூற்றுத் தத்துவங்களையும் ஒருங்குணர வல்லவராவர். இவ் விழுமிய நூலை வெளியிட்டுதவிய வைத்திய சிகாமணிக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. முதற் பாவிற் கண்ட 'வேண்டிட'க்கடைசிப் பாவிற கண்ட 'பரந்தினிலே'போன்ற பிழைகள் திருத்தப்பட வேண்டியன.

சங்கராச்சாரியார் தமது சிஷ்யனுக்கு உபதேசித்ததாகக் காணப்படும் இந் நூல், 'வேதாந்த பரமாசாரியர் ஒருவர் சித்தாந்த பரமான தத்துவங்களை விரித்துரைத்திருப்பாரா?' என்றெண்ணத் தோன்றுகிறது.

—அன்பழகு

**பிரித்தானிய இயந்திர வளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் உலகச் சூழ்நிலை போட்டியை அதிகப்படுத்தும் சூழ்நிலையாக விருக்கவில்லை. ஒருவித ஏகபோக செல்வாக்குப் பிரித்தானிய இயந்திர வளர்ச்சிக்கு உலக அரங்கில் 19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டது.**

# இயந்திரமும் சமுதாயமும்

## எஸ். கே. கந்தையா

ரட்யாட் கிப்ளிங் ஓர் ஆங்கிலச் செய்யுளில் இயந்திரங்களின் திறமையை எடுத்துக் கூறுகிறார். இவ்வித திறமை வாய்ந்த இயந்திரங்களைப்பற்றித் திட்டவட்டமான கொள்கையை நாங்கள் உருவாக்கிக் கொள்வது இன்றைய உலகில் இன்றியமையாததாகின்றது.

ஏற்கனவே ஒரு மறுக்க முடியாத உண்மையை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இன்றைய உலகம் இயந்திர அடிப்படையில் தான் இயங்கிவருகின்றது. 18ஆம் நூற்றுண்டு முடிவில் பிரித்தானியாவில் எழுந்த கைத்தொழிற் புரட்சி படிப்படியாக தேசம் தேசமாக 19ஆம் நூற்றுண்டிற் பரம்பியது. 19ஆம், 20ஆம் நூற்றுண்டுகளின் உலக சரித்திரத்தை இயந்திர மயத்தின் பலனென்று கூறினாலும் கூட அது உண்மைக்கு முரணாகாது.

இயந்திர வளர்ச்சியின் அடிப்படையும் சூழ்நிலையும் காலப்போக்கில் மாறிவந்திருக்கின்றன. 19ஆம் நூற்றுண்டிற் பிரித்தானியாவில் ஏற்பட்ட இயந்திர வளர்ச்சியின் அடிப்படைக்கும் சூழ்நிலைக்கும் ஐக்கிய அமெரிக்காவில் 19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட இயந்திர வளர்ச்சியின் அடிப்படைக்கும் சூழ்நிலைக்கும் வித்தியாசமிருந்தது. அதேபோல பிரான்சில் நெப்போலியனின் காலந்தொட்டு ஏற்பட்ட இயந்திர வளர்ச்சியின் அடிப்படைக்கும் சூழ்நிலைக்கும் ஜெர்மனியில ஏற்பட்ட இயந்திர வளர்ச்சியின் அடிப்படைக்கும் சூழ்நிலைக்கும் வித்தியாசமிருந்தது. மத்திய வர்க்க ஆதிக்கத்தின் அடிப்படையிற் போட்டியற்ற உலக சூழ்நிலையில் 19ஆம் நூற்றுண்டிற் பிரித்தானிய இயந்திர வளர்ச்சி ஏற்பட்டது. தொழிற் பண்பு நிறையப்பெற்றிருந்த ஐரோப்பிய மக்களின் குடியேற்றத்தின் அடிப்படையில் உள்நாட்டபிவிருத்தி செய்யும் சூழ்நிலையில் வளமிக்க, ஆனால் அப்போது சனத்தொகையற்ற, ஐக்கிய அமெரிக்கா 19ஆம் நூற்றுண்டில் இயந்திர வளர்ச்சியை ஏற்படுத்தியது. பிரெஞ்சுப் புரட்சியின் பின் நெப்போலியனின் ஐரோப்பிய ஆதிக்கத்தின் அடிப்படையில் ஐரோப்பாக் கண்டத்தின் இயந்திரத் தொழில்வளம் குறைந்திருந்த சூழ்நிலையில் பிரெஞ்சு யந்திர வளர்ச்சி ஏற்பட்டது. 19ஆம் நூற்றுண்டு முடிவில் ஜேர்மனிய, இத்தாலிய, ருஷிய, யப்பானிய இயந்திர வளர்ச்சிகள் ஏற்கனவே வளர்ந்துவந்த பிரித்தானிய அமெரிக்க, பிரான்சிய இயந்திர வளர்ச்சிகளுடன் சேர்ந்து உலகம் முழுவதையும் இயந்திர முறையின் அரங்காக்கின.

### பிரிட்டனும் அமெரிக்காவும்

இத்தேசங்களின் இயந்திர வளர்ச்சிகள் வெவ்வேறு அடிப்படைகளிலும் வெவ்வேறு சூழ்நிலைகளிலும் 20ஆம் நூற்றுண்டுக்குமுன் ஏற்பட்டனவென்றாலும், முதலாம் உலக யுத்தம் முடியும்வரை இவைகளுக்கு ஒரு பொதுவான உலக சூழ்நிலையும் இருந்தன. முதலாளித்துவ அடிப்படையில் இவைகளெல்லாம் ஏற்பட்டமையும் உலகின் பெரும் பகுதிகளாகிய தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா இவைகளின்வளர்ச்சிக்கேற்ற வியாபாரச் சூழ்நிலையை உதவியமையுமே இப்போது அடிப்படையும் பொதுச் சூழ்நிலையுமாகும்.

இத்தேசங்களின் இயந்திர வளர்ச்சிகள் தங்களிடையே சில சரித்திர முறையான வித்தியாசங்களைப் பிரதிபலித்தன. பிரித்தானிய இயந்திர வளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் உலக சூழ்நிலை போட்டியை அதிகப்படுத்தும் சூழ்நிலையாக விருக்கவில்லை. ஓர்வித ஏகபோக செல்வாக்கு பிரித்தானிய இயந்திர வளர்ச்சிக்கு உலக அரங்கில் 19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டது. எனவே 19ஆம் நூறறுண்டின் பிரித்தானிய இயந்திர வளர்ச்சி பிரித்தானிய சமூக வளர்ச்சியைஏற்படுத்திக்கொண்டே வந்தது. ஏன்வேதான் பிரித்தானிய உள்நாட்டுச் சமூகத்தைப் பொறுத்தவரை ஒருவித தாராள மனப்பான்மை மக்களிடையே பொதுவாக வளர்ந்தோங்கியது. பிரித்தானிய ஜனநாயகம் விட்டுக் கொடுக்கும் தன்மையை அதிகமாகப் பெற்றிருந்தமையும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் வெறும் பலாத்கார அடிப்படையில் (பிரான்சிய, ஜேர்மனிய, யப்பானிய, இத்தாலிய ஏகாதிபத்தியங்களைப் போல ஏற்படுத்தப்படாமல் வந்தமையும் பிரித்தானிய இயந்திர வளர்ச்சியின் அடிப்படை சூழ்நிலையாகிய வற்றின் இருபலன்களே. அமெரிக்க இயந்திர வளர்ச்சியும் உள்நாட்டு சமுதாய, மனப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய அமெரிக்க சமுதாயத்திலும் ஆபிரகாம் லிங்கன், வில்சன், ரூஸ்வெல்ட் போன்றவர்கள் அதிகார பீடத்தில் அமர முடிந்தது.

எனவேதான் பிரித்தானிய, அமெரிக்க இயந்திர வளர்ச்சிகள் அந்த நாடுகளின் உள்நாட்டுச் சமுதாயங்களைப் பொறுத்தவரை பெருமளவான மனவளர்ச்சியையும் சமுதாய சீர்திருத்தங்களையும் ஏற்படுத்தி வந்தன. லிங்கனுடைய போராட்டமும் ரூஸ்வெல்டின் சமரச, ஜனநாயக முயற்சிகளும் பலன் கொடுத்தமைக்கு,இயந்திரவளர்ச்சி19ஆம் நூற்றுண்டில் அமெரிக்க மக்களிடையே பலன்கொடுக்கக்கூடிய மனவளர்ச்சியையும் சமூக சீர்திருத்தத்தையும் ஏற்படுத்தியமையும் ஒரு முக்கிய காரணமாகும்.

பிரித்தானிய அமெரிக்க இயந்திர வளர்ச்சியும் பிரித்தானிய அமெரிக்க உள்நாட்டு சமூக மனப் பண்பாட்டு வளர்ச்சியும் இந்த விதமாக இணைந்து ஏற்பட்டமைக்குப் பிரித்தானியாவின் அமெரிக்காவின் உள்நாட்டுச் சரித்திரப் போக்கு —அதாவது இருபதாம்நூற்றுண்டுக்கு முந்திய உள்நாட்டுச் சரித்திரப் போக்கு சீவாதாரமான ஒருகாரணம்.

# இன்பமும் துன்பமும்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுத்துக் கொள்வார்கள்! அசம்பாவிதங்கள், ஆபத்துக்கள், எதிர்ப்புகள் ஏமாற்றங்கள், கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டவுடனே மனம் ஒடிந்து போகிறார்கள் இதுதானு உலகம் என்று சோர்வு ஏற்பட்டு விடுகிறது. சுருக்கமாகச் சொன்னால், கஷ்டங்களை ஏற்கக்கூடிய-அதுவும் வரத்தானே செய்யும்-என்ற அளவுக்கு மனம் வருவதில்லை, மனேநிலை பண் பாடடையவில்லை. பொருளீட்டும் துறையில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் தற்கொலைகள் அதிகம் நிகழ்வதற்கு இது ஒரு காரணம். சகஅக்கங்களின் தாத்பரியத்தைப் புரிந்துகொள்ளாத கோழைகள் கடைசியில் கோழைத் தனமாகவே இவ்வுலகிலிருந்தும் போகிறார்கள்.! கஷ்டம் ஏற்பட்டால் அது எதிர்பாராததா? பிரியமாக நேசிக்கும் குழந்தை இறந்துவிட்டால் அதனுடன் உலகம் இருண்டு விட்டதா? காதலின் தோல்வி என்றால் உடனே கழுத்தில் கயிறுதான் ஏறவேண்டுமோ? இதுஒன்றிற்காகத்தானு படைக்கப்பட்டோம்?

(அடுத்தஇதழில்முடியும்)

---

# இந்தியத் தூதுவர்

### திரு. சக்கரவர்த்தி வருகை

சென்றவாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகைபுரிந்த இந்தியத் தூதுவரான மேன்மை தங்கிய பி. என். சக்கரவர்த்தி அவர்களும் திருமதி சக்கரவர்த்தி அவர்களும் சென்ற 10-10-55 திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஒரு விருந்தளித்தனர். பிரமுகர்கள் பலர் இவ் வைபவத்திற் கலந்துகொண்டனர்.

# வாழ்வில் ஒளி

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பாள். என்ன சரிதானே" என்றேன்.

பார்வதியின் நீர் வடிந்து கன்றிப்போன முகம் பிரகாசமடைந்தது. என் பாதங்களில் விழுந்தாள். நான் அவளை அன்புடன் தூக்கி நிறுத்தினேன்.

அன்று தொடக்கம் பார்வதியும் அழகனும் எங்கள் குடும்பத்தில்ஐக்கியமாகிவிட்டனர். அம்மாவும் பார்வதியையும் அழகனையும் நன்றாகக் கவனித்துக்கொண்டாள். அவளின் அன்பும் பண்பும் என் உள்ளத்தைக் கவர்ந்து இழுத்தது. என் தங்கை இல்லாத குறையை அவள் நிவர்த்தி செய்தாள்.

—(அடுத்த இதழில் முடியும்)

# உருத்திரபுர சிவாலயம்

# அருள் வளம் மிகுந்த இடம்

## குன்றக்குடி அடிகளாரின் கருத்து

உருத்திரபுர சிவாலயத்தை இன்று தரிசித்தமையால் என் மனதில் ஒரு புதிய உற்சாகம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு குன்றக்குடி அடிகளார் உருத்திரபுர சிவாலயத்தைச் சமீபத்திற் தரிசித்தபின்னர் கூறினார். சுவாமிகளை வரவேற்க உருத்திரபுர சிவாலய நிர்வாக சபை அங்கத்தினர்களான திரு. கே. சதாசிவம் திரு. ச. அம்பிகைபாகன் ஆகியோரும் திரு. வே. குமாரசாமி எம். பி. அவர்களும் சமுகமாயிருந்தனர். திருமுறை வழிபாட்டின் போது அடிகளார் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். அடிகளார் தொடர்ந்து கூறியதாவது: "மனிதனுடைய ஆத்மாவுக்கு பேராற்றல் உண்டு. இச் சிவலிங்கம் பலகாலம் பூசை முதலியன இல்லாதிருந்தபோதும் அதனாற்றல் குறையவில்லை. நான் பல கோவில்களுக்குப் போகிறேன் ஆனால் சில இடங்களிலேதான் உண்மையான ஈடுபாடு உண்டு. அவ்விடங்களிற் பெரியார்களுடைய தொடர்பு நிச்சயமாக விருந்திருக்க வேண்டும். இங்கு அருள்வளம் நிறைந்திருக்கிறது. இவ்விடத்துக்கு அருகாமையில் நகரச் சாக்கடைகள் வராது காக்க வேண்டும். இவ்விடத்திலிருந்து ஒருமைலுக்கு அப்பால்தான நகரம் அமையவேண்டும். முற்காலத்தில் கோயில்களுக்கு அருகாமையில் இருந்த வீதிகளை மாட வீதிகள் என்று அழைத்தனர். அங்கு குடிகள் இரா. அநேகமாக பூசகரே இருப்பார். இவ்விடத்தின் புனிதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கோவில் நிர்வாக சபையாரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எண்ணங்கள் அனுத்தன்மை வாய்ந்தவை. அவை சராசரங்கள் எல்லாவற்றையும் ஊடுருவிச் செல்லும் தன்மை வாய்ந்தவ. கங்கையின் புனிதத்தன்மையின் காரணம் இருடிகளின் எண்ணங்கள் கலந்து வருவதே. இளைஞருக்குச் சிறப்பாக ஒரு விஷயம் கூற விரும்புகின்றேன். கடவுட் சிந்தனை அவசியம். மனத்துயரை விஞ்ஞானம் போக்காது. மாணிக்கவாசகர் இறைவனைக் காந்தத்துக்கும் ஆத்மாவை இரும்புக்கும் ஒப்பிட்டுள்ளார். இறைவனைச் சில நாட்களுக்குத் தியானம் செய்தாலும், அவனுடைய அருள் நமக்குக் கிடைக்கும்.

இலங்கையிற் பல சமயத்தினர் வசிக்கின்றனர். அவர்கள் எல்லோருக்கும் உதவி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமை. இந்தோனேஷியாவிற் சுகார்னோவின் அரசாங்கம ஒரு கோவிலைப் புனருத்தாரணஞ் செய்து வருவதை நான நேரிற் பார்த்தேன். அதைப் போல் இக் கோவிலைப் புனருத்தாரணஞ் செய்வதற்கு இலங்கை அரசாங்கமும் உதவி செய்ய முன்வரவேண்டும். அப்படிச் செய்தால் சைவ மக்கள் எப்போதும் அரசாங்கத்துக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

வவுனியாவில்

ஈழகேசரி

கிடைக்குமிடம்.

சுத்தானந்த பவன்

வவுனியா

# 'ஈழகேசரி' விற்பனையாளருக்கு:

'ஈழகேசரி' விற்பனையாளர் தமக்கு வழக்கமாக அனுப்பப்பெறும் பிரதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ விரும்பினால் பிரதிவாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அதிபர்

# செனற்றர் பதவி

## சிலரின் தீவிர முயற்சி

கொழும்பு

சமீபத்தில் நியமிக்கப்படவிருக்கும் செனற்றர் பதவிகளுக்கு அரசாங்கக் கட்சிக்குள்ளேயே பலத்த போட்டி ஏற்பட்டிருக்கிறது. வெளியிடங்களிலுள்ள அனேக யு. என். பி. பிரமுகர்கள் முதலமைச்சரை நோக்கி அடிக்கடி படையெடுத்து வருவதற்கும் காரணம் உண்டு. அவர்களிற் சிலர் நட்புரிமையையும் கட்சிக்குச் செய்த தொண்டையும் முன்வைத்துப் பதவிப் பிச்சை கேட்கின்றனராம் இப் பதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் முதலமைச்சர் இறுதி நேரத்தில எத்தகைய முடிவுக்கு வருவாரென்பதை முன்கூட்டியே ஊகிக்கமுடியாமலிருக்கிறது.

இப்போது நிரப்பப்படவிருக்கும 5 நியமன உறுப்பினர் பதவிகளில் தங்களுக்கும் பங்குதரவேண்டுமென்று சில சிறுபான்மைச் சமூகத்தினர் பெயரால் உரிமை கோரிவருகின்றனர். இச் சமூகத்தினரில் யாழ்ப்பாணத்திலுள்ள ஹரிசன மக்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஹரிசன சமூகத்துக்கு இத்தடவை ஒரு பிரதிநிதித்துவம் அளிப்பதா இல்லையா என்பதை முதலமைச்சர் இன்னும் முடிவு செய்யாவிட்டாலும் அவர்களிடையே பிளவும் போட்டி மனப்பான்மையும் ஏற்பட்டுள்ளதென்பது வெளிப்படை. குறித்த பதவியை அடையச் சில பொதுத் தாபனங்களும் தனிப்பட்டவர்களும் தீவிர முயற்சி செய்துவருவதாகத் தெரிகிறது.

—நமது நிருபர்

ஈழகேசரி

சுன்னாகம் மன்மத புரட். ௩௦
— [illegible] ஆண்டு 86 —
[illegible] இல. 805

# மொழித் தகராறு

ஆசிய நாடுகளுக்கெல்லாம் இலங்கை ஒரு முன்மாதிரியாக இருந்து வருகின்றது. இங்கு மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். கலகங்களோ குழப்பங்களோ இலங்கையின் அமைதியைக் குலைப்பதில்லையென வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைத் தலைவர்கள் பெருமை பேசுவதுண்டு. 'இலங்கையைப் பாருங்கள்; அங்கு சுதந்திரதேவி இன்னல் எதுவுமின்றி மக்களுக்கு இன்னருள் பொழிந்துகொண்டிருக்கின்றாள், அந்நாட்டிற் பசியில்லை; பிணியில்லை; பூலோக கைலாசமாகவே ஸ்ரீலங்கா திகழ்கின்றது' என மேனாட்டுப் பத்திரிகைகளும் சிற்சில வேளைகளில் இலங்கை பெற்ற சுதந்திரத்தைப்பற்றிச் சிலாகித்து எழுதுவதுண்டு.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் சிலவற்றுக்கிடையில் ஏற்படும் அரசியல் தகராறுகளை ஆராய்ந்து நீதியை நிலைநாட்டுவதற்கு இலங்கை முதலமைச்சரின் ஆலோசனைகள் உதவியாகுமென உலகம் எண்ணுமளவுக்கு இந்நாட்டின் புகழ் ஓங்கலாயிற்று. இத்தனைக்கும் இலங்கையில் உள்நாட்டுக் கலகங்களோ, அரசியற் கெடுபிடிகளோ இல்லையென்ற எண்ணமே காரணமாகும். அமெரிக்காவின் பிரசார உதவியும் இலங்கைக்குக் கிடைத்திருப்பதால் இலங்கையின் புகழ் பல்கிப் பெருகுவதற்கு வேறென்ன வேண்டும்!

தூரத்துப்பச்சை கண்ணுக்குக் குளிர்மை என்பார்கள். அதேபோன்று வெளிநாட்டுத் தலைவர்களும் அங்குள்ள மக்களும் இலங்கையை அமைதியின் இருப்பிடமாகவே எண்ணிவருவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. இத்தகைய சிறப்புக்கு இருப்பிடமாக விளங்கும் இலங்கையின் அமைதியையும் மக்களின் ஒற்றுமையையும் சென்ற புதன்கிழமை கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் பாழாக்கி விட்டதென்றால் அரசினருக்கு அது பெருந் துயரமாகத்தான் இருக்கும். இந்த நிலைமை ஏற்படுவதற்குத் தாய்மொழி அபிமானமே காரணமாக அமைந்துள்ளதெனின் இலங்கை பெற்றுள்ள சுதந்திரத்தைப் பார்த்து யார்தான் யோசிக்க மாட்டார்கள்? இச் சுதந்திரத்துக்குப் பெரும்பான்மையினரே அருகதையுடையவர்கள் என்று உலகம் எண்ணுமளவுக்கு மொழிச் சிக்கல் இந்நாட்டைப் பாதித்து வருகின்றது.

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளிப்பதென்பது அரசினரின் முடிபு. ஆனால் அதை அரசியற் சட்டத்தில் அழுத்தத் திருத்தமாக இடம்பெறச் செய்வதில்தான் அவர்கள் தயங்குகின்றனர்; காலதாமதம் செய்கின்றனர். தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளிக்கவேண்டுமென இடதுசாரிகளே கச்சையை வரிந்துகட்டிக் கொண்டு தங்களுக்குச் சார்பாகப் பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்ட முற்பட்டிருக்கும்போது அரசினர் எதற்கும் தயங்கவேண்டியதேயில்லை. அதை விடுத்துச் சில புத்த பிக்குகளையும் சிங்கள வகுப்புவாதிகளையும் திருப்திப்படுத்திப் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு ஆட்சிக்கட்சியினர் திட்டமிட்டு வருவதாற்றான் மொழிச் சிக்கல் நாட்டில் அமைதியைக் குலைத்து மக்களிடையே கலக நிலையை உண்டாக்கி வருகின்றது. இதனாலேயே கொழும்பு நகர மண்டபத்திற் கொம்யூனிஸ்ட் கட்சியினர் சென்ற புதன்கிழமை நடாத்திய கூட்டம் குழப்பத்தில் முடிந்ததுமன்றி அடி பிடி சண்டையையுங் கிளப்பிவிட்டது. இக் குழப்பம் தமிழ்ப் பேசும் மக்களிடையே பெருந்திகிலை உண்டாக்கி அரசினரின் போக்கிலும் சந்தேகம் ஏற்படச் செய்துவிட்டது.

மொழி சம்பந்தமாக நாடு இரண்டுபட்டால் அதனால் ஏற்படும் அனர்த்தங்கள் இலங்கையின் சுதந்திரத்துக்கே ஆபத்தை உண்டாக்கிவிட முடியும். ஆகவே, அரசினர் இருமொழிக் கொள்கையைச் சட்டபூர்வமாக ஏற்று இச் சிக்கலுக்கு ஒரு முடிவுகாண்பதே புத்தியான செயலாகும்.

வகுப்புவாத வெறியும் மதத்தின்பேரில் வைராக்கியமும் நாட்டு மக்களிடையே பரம்பி அவர்களின் நிதானத்தைச் தளம்பச் செய்து வருகின்றதென்பதற்குக் கொழும்பு நகரசபைக் கூட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பொறுப்புள்ள சிங்களத் தலைவர்களும் அரசினரும் வளர்ந்து வரும் இப் புதிய ஆபத்தைக் களைய சகல நடவடிக்கைகளையுங் கையாளவேண்டும்.

# பாதை ஓரத்தில்

## பாட்டைசாரி

யுத்தகாலத்தில் உலக மக்களிடையே தவறான செய்திகளையும் பொய்புரட்டுகளையும் பரப்பி நிலைமையைத் தத்தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்குப் 'பிரசாரம்' பெரிதும் உதவிசெய்துவந்தது. ஹிட்லருடைய சகாக்கள் இத்துறையில் மிகுந்த சாமர்த்தியமாகப் புத்தம் புதிய வழிகளைக் கையாண்டு, உலகையே கலக்கியடித்தனர். ஈற்றில் படுதோல்வியடைந்து மண்கவ்வினர்.

இலங்கையிலும் ஒருசிலர் இந்தவிதமான பிரசார வழிகளைக் கையாண்டு நாட்டிலே தமக்குச் சார்பாக மக்களின் அபிமானத்தைப் பெறமுயற்சிக்கின்றனர். சென்றவாரம் மட்டக்களப்பு வாடிவீட்டிலிருந்து கிளம்பி நாடெங்கும் மிகுந்த பரபரப்பை உண்டாக்கிய தாய்மொழி சம்பந்தமான செய்தியும் இந்தப் பிரசார வகையையே சார்ந்தது. இதில் அமெரிக்க வாடையும் சேர்ந்து ஓர் நாற்றத்தை உண்டாக்கி விட்டதெனப் பலர் கருதுகின்றனர்.

தமது சொந்த நலத்துக்காகத் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலத்துக்குக் கொள்ளி சொருகிவிட அரசியல்வாதிகள் சிலர் முனைந்து நிற்பதென்றால் அதனிலும் பார்க்க இழிசெயல் வேறொன்றுமில்லை. பதவிப் பித்தும் சுயநலவாஞ்சையும் கண்களை மறைத்து மானத்தை விலை கூறி விற்குமளவுக்குச் சில தலைவர்களை ஆட்டம் போடச் செய்கின்றன. இதற்கு அடங்கி ஒடுங்கித் தங்கள் சுயமரியாதையை அத் தலைவர்கள் காற்றிலே பறக்கவிடுவதைப் பற்றி நாட்டு மக்களுக்குக் கிஞ்சித்தும் கவலையில்லை.

தாய்மொழியின் அருமை பெருமைகளை இவர்கள் அறியாமல் தலைதெறித்துத் திரிவதும் பைத்தியக்காரர்களைப் போற் பசப்புவதும்தான் வெட்கம் வெட்கமாக விருக்கின்றது.

### அரசியலில் ஆண....

அரசியல் துறையில் ஈடுபடுபவர்களுக்குக் கல்வியறிவே வேண்டியதில்லை யென்பது சாதாரண மக்களின் அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயம் வலுப்பெற்று வரும் இந்நாட்களில் பௌத்தபிக்கு ஒருவர் இந்தியப் பெண்மணிகளை இலங்கைப் பெண்மணிகளுடன் ஒப்பிட்டு, இந் நாட்டுப் பெண்களுக்கு அரசியலில் ஆண ஆவன்னாக் கூடத்தெரியாதென மினுவாங்கொட என்ற இடத்தில் நடைபெற்ற மகில சமிதிக் கூட்டமொன்றிற் பேசியிருக்கின்றார்.


இந்தியப் பெண்மணிகள் தங்கள் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவற்றை நிலைநாட்டுவதிலும் ஏனையோரை மிஞ்சிவிட்டார்கள் என்பது பண்டித இராசபான சுமதிபால தேரர் அவர்களின் கருத்து. அரசியற் சேற்றில் கால்வைத்து உதாரணம் காட்டிய பிக்கு அதைவிடுத்துச் சாதாரண இந்தியப் பெண்மணியின் திறமையை, ஆனா ஆவன்னாத் தெரியாத சிங்களப் பெண்மணிகளுக்கு எடுத்துக்கூறியிருக்கலாம். இந்தியப் பெண்மணிகள் தேயிலைத் தோட்டத்திற் கொழுந்து கிள்ளுவதையே ஒரு கலையாக்கியுள்ளனர். அதுதானும் சிங்களப் பெண்களுக்குத் தெரியாதெனக் கூறிப் பெரிய சண்டையையேகிளப்பியிருக்கலாம்! மதுகனம் சிங்களப் பெண்கள் ரோச மிகுதியினால் தேயிலைத் தோட்டங்களுக்குப் படையெடுத்து இந்தியப் பெண்களுடன் போட்டி போட்டு ஒருவர் மூக்கை மற்றொருவர் கிள்ளுவார்களாயின் அது கண்கொள்ளாக் காட்சியாகவேயிருக்கும். அத்துடன் பத்திரிகைகளும் கொட்டையெழுத்துக்களில் விளாசுவதற்கு ஏற்ற செய்தியுமாகிவிடும்!

### பிறருக்கு உபதேசம்

பெண்மணிகளுக்கு அரசியல் உபதேசம் செய்த அந்தப் பிக்கு வேறுமொரு துறையிலும் இறங்கியிருக்கின்றார். அதாவது, பெண்மணிகள் காதற் கடிதங்கள் எழுதி அருமையான நேரத்தை அவமாக்காது சிங்களப் பண்பாட்டை மீண்டும் நாட்டில் மலர்ச்சியுறச் செய்யலாமெனபது அவருடைய அறிவுரையாகும். அத்துடன் அவர்கள் புத்ததர்மத்தின்படிவாழ்க்கையையும் நடத்தவேண்டுமாம். இப்படி ஒழுகினால் நாட்டில் கொலையுங் களவுங் குறையுமென அவர் நம்புகின்றார்.

அரசியற் கூட்டங்களில் ஈடுபட்டுக் கலவரம் செய்யும் சில புத்த பிக்குகளுக்கும் இப்படியான அறிவுரைகள் அவசியமாக இருக்கின்றன. இவர்கள் அரசியலிற் காலத்தைக் கழிக்காமல் 'புத்தம் சரணம் கச்சாமி' என்று சொல்லித் தங்கள் பாட்டில் இருந்துகொண்டு புத்த தர்மத்தை வளர்ப்பார்களாயின் நாட்டின் அமைதிக்கும் ஒழுக்கமான வாழ்வுக்கும் அரண் செய்ப்வர்களாவார்கள்.

# பிரமஸ்ரீ சி. பொ. சுந்தர சர்மா அவர்களின் பிரிவு



[காலஞ்சென்ற பிரமஸ்ரீ சி. பொ. சுந்தர சர்மா]

யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் 30 வருட காலம் ஆசிரியராகப் பணியாற்றி இளைப்பாறியவரும், அதன் பின்னர் சென்ற 5 வருட காலமாக 'ஈழகேசரி' நிலையத்திற் கடமையாற்றிவருமான பிரமஸ்ரீ சி. பொ. சுந்தரசர்மா அவர்கள் சென்ற 12-10-55 புதன்கிழமை பிற்பகல் 1-30க்கு மாரடைப்பினால் திடீரெனக் காலமாயினார்கள் என்ற செய்தியை வருத்தத்துடன் வெளியிடுகின்றோம். சுக பலத்துடன் காரியாலயத்துக்கு வந்து செல்லும் சர்மா அவர்கள் இறைவனடி எய்திய தினத்தன்றும் பரிமளிப்புடனேயே வந்திருந்தார்கள். அதே தினம்,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்ற வள்ளுவரின் வாக்கை நிலைநாட்டிவிட்டுத் தில்லைக்கூத்தனின் திருவடி நீழலை அடைந்துவிட்டார்கள். இறக்கும்போது அவர்களுக்கு வயது 65.

யாழ்ப்பாணத்து ஏழாலையைச் சார்ந்த குப்பிழான் என்ற கிராமத்தில் ஐயர் அவர்கள் பிறந்தார்கள். பிரமஸ்ரீ பொன்னையரதும் இலட்சுமி அம்மாளதும் புதல்வனாகத் தோன்றிய சர்மா அவர்கள் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்களைப் பெரிய தந்தையராகப் பெற்ற பெருமைக்கு உரியவர்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும், வடமொழியிலும் அறிவு படைத்த சர்மா அவர்கள் கட்டுரைகள் எழுதுவதிலும் கவிதைகள் இயற்றுவதிலும் இயற்கை ஆற்றல் பெற்றவர்கள். பிரேமசுந்தரன், அன்பழகு, கருணாகரன், அறிவன் சர்மன், என்ற பல புனை பெயர்களிற் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியுள்ளார்கள்.

குழந்தை உள்ளம் படைத்த சர்மா அவர்கள் இறை பக்தி மிக்கவர்கள். அத்துடன் மக்கள் அனைவரும் இறைவனின் குழந்தைகள் என்ற பெருநோக்குப் பூண்டவர்கள்.

பள்ளிக்கூட ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும் அவர்கள் உடனாசிரியர்களுக்கு உறுதுணைவனாகவும், மாணவர்களுக்கு ஒரு தகப்பனாராகவும் விளங்கிவந்தார்கள். வைத்தீசுவர வித்தியாலயத்தின் வளர்ச்சியிற் கண்ணும் கருத்துமாக விருந்துவந்த ஐயர் அவர்கள் வாழ்க்கையிற் பல்வேறு துறைகளிலும் உயர்ந்த பதவிகளை வகிக்கும் பெரியார்கள் பலரைத் தமது மாணாக்கர்களாகப் பெற்றிருந்தார்கள்.

அவர்கள் இளைப்பாறியபோது வைத்தீசுவர வித்தியாலயம், அவர்களைத் தக்க முறையிற் கௌரவித்தது. இவ்விழாவிற் சர்மா அவர்களின் பழைய மாணவர்களில் ஒருவரான பேராசிரியர் கே. எஸ். அருள்நந்தி அவர்கள் பங்கு பற்றித் தமது குருவை ஆசீர்வதித்திருந்தார்கள்.

ஈழகேசரி நிலையத்தில் அவர்கள் பணியாற்றிய நாட்கள் இன்பகரமான நாட்கள். தமது அறிவையும் ஆற்றலையும் நன்கு பயன்படுத்தி ஒரு கலைக்களஞ்சியமாக விளங்கினார்கள். பத்திரிகைகளையும் சமய நூல்களையும் வாசிப்பதே

[தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க]

★ ஒரு சிலர் உட்கார்ந்து உணவு கொண்டதேயன்றி, மகாநாடோ, கூட்டமோ ஒன்றும் அங்கு நடைபெறவில்லை.

# வாடி வீட்டுக் கூட்டம்

## மொழிச் சிக்கலும் கற்பனை வேகமும்

## திரு. இராசமாணிக்கம் தரும் விளக்கம்

சமீபத்தில் மட்டக்களப்பு வாடிவீட்டில் நடைபெற்ற மதிய உணவின்போது கிழக்குமாகாண எம். பீக்கள் சிங்கள மொழியே இலங்கையின் அரசகரும மொழியாக வேண்டுமென முடிவு செய்தனர் என்ற செய்தி தமிழ் பேசும் மக்களிடையே பெரிய பரபரப்பை உண்டாக்கியது. நிலைமையைத் தெளிவாக்கி ஈழகேசரிக்குத் தமது திடமான கருத்தைப் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் எழுதியுள்ளார். ஈழகேசரியின் மட்டக்களப்புப் பிரதிநிதி, திரு. இராசமாணிக்கம் அவர்களைக் கண்டு பேசிய விபரம் கிழக்குத் தபாலில் வெளியாகியுள்ளது. திரு. இராசமாணிக்கம் அவர்கள் எழுதுவதாவது:

மொழிச்சிக்கல் சம்பந்தமாக வாடிவீட்டில் கூட்டமொன்றும் நடைபெறவில்லை, ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. முதலாம் திகதி நடந்த பகுதி விவசாய நிருவாகக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன். கூட்டம் முடிந்ததும் தனியாகவே நடந்து சென்றேன். ஏறக்குறைய 10 நிமிஷங்களின் பின் அந்த மகாநாட்டிற் கலந்துகொண்ட ஜனுப் மீர்சாவும் 4 அரசாங்க ஊழியர்களும் காரில் வாடிவீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் ஒருமித்து மத்தியான போசனத்திற்கு உத்தரவு செய்தோம். உணவு தயார் செய்வதற்கு 45 நிமிஷங்கள் வரை செல்லுமென்று தெரிந்தது. எங்கள் யப்பான் யாத்திரையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

10 நிமிடங் கழித்துக் கற்குடாப் பிரதிநிதி திரு. நல்லையாவும் வந்து சேர்ந்தார். அவரும் எங்களுடன் உட்கார்ந்தார். சில நிமிடங்களால் அவரும் ஊழியரொருவரும் சம்பாஷணையி லீடுபட்டனர். அந்தச் சம்பாஷணையில் மொழிச்சிக்கல் பற்றியும் சில வார்த்தைகள் இடம்பெற்றன. அதில் அக்கறை கொள்ளாததினுல் நான் வேறோர் ஆசனத்திற் போய் உட்கார்ந்தேன். சம்பாஷணைக்கிடையே அங்கிருந்தோர் கேள்விகளுங் கேட்டனர். திரும்ப உணவு பரிமாறப்பட்டது. திரு. நல்லையா அங்கு காத்திருந்த சிலருடன் வெளியே சென்றனர். ஜனுப் மீர்சா ஆதியோருடன் நான் உணவருந்தினேன். அப்பொழுது ஒருவர், “நீங்கள் ஒரேயடியாய் மௌனமாயுட்கார்ந்து விட்டீர்களே” என்று கேட்டார்.

மொழிச்சிக்கல் பற்றிய எனது கருத்து நாட்டிற்குத் தெரிந்ததே. மேடைகளிலும், பத்திரிகைகளிலும், பிரதிநிதிகள் சபையிலும் எனது கொள்கையைத் தெளிவாகக் கூறியுள்ளேன். மற்றவர்கள் கூற்றுக்கள், சம்பாஷணைகள், கற்பனைகளுக்கு நான் பொறுப்பாளியல்ல. ஒரு சிலர் உட்கார்ந்து உணவு கொண்டதேயன்றி மகாநாடோ, கூட்டமோ ஒன்றும் அங்கு நடைபெறவில்லை.

அந்தச் செய்திக்கு மறுப்பு விட்டதிலிருந்து இரு எம். பிக்களும் மொழிச்சிக்கல் பற்றிய மகாநாட்டிலோ, கூட்டத்திலோ, விவாதத்திலோ கலந்துகொள்ளவில்லை யென்பது வெளிப்படை. மகாநாடுபற்றிய செய்தியை வெளியிட்ட பத்திரிகைகள் தங்களுக்குத் தகவல் தந்தவரும் அந்த மகாநாட்டிற் கலந்துகொண்டதாகக் கூறுகின்றன. ஆகவே தகவல் தந்தவரும் இது சம்பந்தமாகத் தெளிவான ஓர் அறிக்கையை வெளியிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். நேர்மையாகவும் ஒளிவு மறைவின்றியும் உள்ளதை உள்ளபடியே கூறியும் பொது வாழ்விலீடுபட்டிருக்கும் என்போன்றோர் ஒருவர் வாடிவீட்டு நாற்காலியில் ஒரு சிறிதுநேரம் ஓய்வுபெறுவது கூடப் பாதுகாப்புள்ளதாகத் தென்படவில்லை.



[விபுலாநந்த அடிகளார்]

முதல் தமிழ்ப்பேராசிரியராகிய விபுலாநந்தஅடிகளாரின் உருவப்படத்தை இலங்கைப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள் சென்ற சனிக்கிழமை மாலை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் திரை நீக்கம் செய்து வைத்தார்கள்.

---

> அமுதமொழி
>
> அவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும். —வள்ளுவர்

## அவலமான அனுபவம்

### ‘பஸ்கம்பெனி’கள் போட்டி

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

கடந்த பொது வேலை நிறுத்தத்தின்போது கூடக் கண்டறியாத . அவலமான அனுபவமொன்றை யாழ்ப்பாண நகரம்சென்ற வியாழக்கிழமை கண்டு பீதியடைந்தது. இரண்டு பஸ்க் கம்பனிகளுக்கிடையில் உண்டான போட்டாபோட்டியே இதற்குக் காரணமாகும். இப்போது அமைதி நிலவுகிறது.

வியாழக்கிழமை(13–10–55) பிற்பகல் பஸ்நிலையத்தில் திடீரென மூண்ட கலகத்தை யடக்கப் போலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டியிருந்தது. இதனுல் ஒருவர் காலிற்சுடப்பட்டு காயத்துக்குள்ளானுர். மற்றும் பலருக்குக் காயங்களேற்பட்டன. 23 தொழிலாளர்கள் வரை தற்போது காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் எனத்தெரிகின்றது.

கச்சேரிவழியாகப் பஸ் போக்குவரத்து நடத்துவதில் மத்திய பஸ் கம்பெனிக்கும் வடபகுதி ஓம்னி பஸ் கம்பெனிக்கு மிடையிலுண்டானதகராறேஇக்கலகத்துக்குக்காரணமெனத்தெரிகிறது இதனுற் சில பஸ்வண்டிகள் ஒன்றேடொன்று மோதுண்டு சேதமடைந்திருக்கின்றன. மேலும் பயங்கரமான விளைவுகள் ஏற்படலாமென எண்ணிப் பலமான ஆயுதப் பொலிஸ் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

இக்கலவரங்களால் ஏற்பட்ட ஒரேயொரு நன்மையெதுவெனில் யாழ்ப்பாணம் கச்சேரிவரை பிரயாண வசதிகள் தாராளமாக இருப்பதேயாம்.

---

## மொழியின் பெயரால் குழப்பங்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கணமொன்று இச் சிக்கலையிட்டுப் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தில்லிக்குப் பறந்து செல்லுமோ என்ற வதந்தியும் உலாவுகிறது. அப்படிச் செல்வதாயிருந்தால், அதற்குமுன்பு தங்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தும்படி மறுபடியும் அழைத்திருக்கிறது இலங்கை சனநாயகக் காங்கிரசு. இ-சனநாயகக் காங்கிரஸ் இந்தியாவுக்கும், குடியுரிமைச் சிக்கலுக்கும் தொடர்பே இல்லை என்றும், இது ஒரு மக்கள் சிக்கலாதலால், அச் சிக்கலோடு தொடர்பு கொண்ட மக்களின் பிரதிநிதிகளாகிய தங்களுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளே பயன்தரும் என்று, தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது. ஆனுலும் இச்சிக்கலைத்தீர்க்காமல் வைத்துக்கொண்டே தேர்தற் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடி முடிப்பதன்றே ஆட்சியாளரின் அருமையான திட்டம்?

### அரசகரும மொழி

எங்கும் மொழிச்சிக்கல் என்பதே பேச்சு என்று கூறத்தக்க வகையிலே சர்வவியாபகமாகிப் பெருருக்கொண்டிருக்கும் அரசகரும மொழிச் சிக்கல் பின்னும் பல கூட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் காரணமாக அமைந்துவிட்டது, சென்ற புதனன்று நடைபெற்ற நகர சபை மண்டபக் கூட்டம், வருகிற ஞாயிறன்று அதேஇடத்தில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டம், இவற்றுக்கெல்லாம் அரசகருமமொழி எதுஎன்ற மகத்தான வினுவே வித்தாக அமைந்துள்ளன.

## மொழிச் சிக்கல்

### நகர சபைக் கூட்டம் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

கொழும்பு

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்கவேண்டுமென்பது நவலங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கை. இதனை விளக்கித் தங்கள் கருத்துக்களைப் பொது மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக இன்று (16-10-55) மாலை கொழும்பு நகரமண்டபத்தில் மாபெருங் கூட்டமொன்று நடைபெற்றது. 5000 பேர்வரை திரண்டிருந்தனர். டக்டர் என். எம். பெரேரா அவர்கள் தலைமை தாங்கினுர்கள். இக் கொள்கையை ஆட்சேபிப்பவர்கள் வெளியே கூடிக் கலகத்தை உண்டாக்கினர். பொலீஸ் காவலில் கூட்டம் நடைபெற்றவிடத்தும் வெளியே கலகம் ஏற்பட்டதால் பொலிஸ்காரர் கண்ணீர்ப்புகை பிரயோகித்தனர். இக்குழப்பத்தில் 800 பிக்குகள்வரை சேர்ந்துகொண்டனர். மாலை 3 மணிக்கு ஆரம்பமான கூட்டம் 5 மணிக்கு முடிவுற்றது. ந. நி.

## சமயக் கல்வி

சமயக்கல்வி சம்பந்தமாக வடபகுதி வித்தியாதிகாரி அதிபர்களுக்கு விடுத்துள்ள நிருபம் வருமாறு.

வண்ணுர்பண்ணை இந்துக் கல்லூரி மண்டபத்தில் (22–10–55) சனிக்கிழமை 9.15 தொடங்கி மாலை 4.00 மணி வரை (நண்பகல் இடைவேளை தவிர்த்து) சமயக்கல்வி சம்பந்தமான ஆலோசனை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகியுள்ளது. இந்தவட்டாரபுத்த ஜயந்தி வைபவ ஒழுங்குகளுக்கும் இதுசார்புடைத்தாம்.

இந்தியாவில் இலங்கைப் பிரதிநிதியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவரும் அகில இலங்கை இந்துமன்றத் தலைவருமாகிய திரு . சி குமாரசாமி அவர்களது தலைமையில் பாராளுமன்ற கல்வித்துறை நிரந்தர காரியதர் திரு எச். பினதாஸ் சி.சி எஸ். விரிவுரைஆற்றுவார்.

விரும்பின் கலாசாலையிலேயே ரூபாய் ஒன்றுக்கு நண்பகல் போசனம் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு வேண்டிய ஒழுங்குகள் செவ்வனேசெய்யப்படும்.

சமய பாடம் கற்பிக்கும் உதவி ஆசிரியர்களையும் தங்களையும் விருப்புடன் அழைக்கிறேம். தங்கள் இதயபூர்வமான ஒத்துழைப்பைப் பெறுவேன் என்று திடமாக நான் நம்புகிறேன்.

---


## காணி உரிமைப் பதிவு மசோதா

### செனட் சபையின் தெரிவுக் கமிட்டி

இக்கமிட்டிக்குப் பிரதிநிதித்துவங்கள் அளிக்க விரும்பும் சகலரும் அப்படிப்பட்ட பிரதிநிதித்துவங்களை எழுத்தில் 1955 நவம்பர் 30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 1, செனட் சபைக் கட்டடத்திலிருக்கும் செனட் சபையின் விகிதருக்குச் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள்

எழுத்தில் பெறப்பட்ட பிரதிநிதித்துவங்களைப் பரிசீலனை செய்தபின் நேர்முகமாக வாக்குமூலம் பெறக் கமிட்டி தீர்மானிப்பின் விசாரிக்கப்படும். இடத்தையும், நேரத்தையும் குறிக்கும் அறிவித்தலைச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பெறுவர்.

ஆங்கிலத்திலுள்ள காணி உரிமைப் பதிவு மசோதாவின் பிரதிகளை கொழும்பு 1, செக்ரட்டேரியட்டில் இருக்கும் அரசாங்க பிரசுர இலாகாவில் பிரதி ஒன்றுக்கு ரூபா 3–40 செலுத்துவதன்மூலம் வாங்கலாம்.

ஈ. வி. ஆர். சமரவிக்கிரம,
செனட் சபையின் விகிதர்,

செனட், கொழும்பு 1.
1955 அக்டோபர் 14ஆந் திகதி, [A232]


---

## காலஞ்சென்ற பிரேம சுந்தர சர்மன் அவர்களுக்கு

### விபுலாநந்த அடிகளார் எழுதியது*

வடபா லதுவே வான்புக ழிமயம்
தென்பா லதுவே மன்பதை யீழம்
வடகட லிட்ட வானுகத் தொருதுளை
தென்கட லிட்ட கழிகோத் தன்ன
தன்மைய தென்ப அன்பின் கூட்டம்
ஆங்கம் மொழிப்பொரு ளீண்டியா முணர்ந்தனம்
வடபா லிமயத்து வதியு மோருயிர்
தென்பா லீழத்துத் திகழு மோருயிர்
ஈருயிர் தம்மையும் இணைக்கு மெய்யன்பு
அன்போ டணைந்த அழகெனும் பெயரோய்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்று
மன்னுக பெரும நின்பே ரன்பே!

*அடிகளார் இமாலயத்துள்ள மாயாவதி ஆச்சிரமத்தில் வதிந்து ‘பிரபுத்த பாரதம்’ எனும் ஆங்கில இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திற் சுந்தரசர்மன் அவர்களுக்கு அடிகளார் எழுதிய திருமுகம்.

# ஆசிரியர்களின் உரிமைக் குரல்

## ஊர்வலத்தின்போது சோகக் கதை

## ஆறு மாதத்தில் வேலை நீக்கும் அக்கிரமம்

நமது நிருபர்

சாது மிரண்டால் காடு கொள்ளாதென்று நாடோடியாகச் சொல்லிக்கொள்வார்கள். வாயில்லாப் பூச்சிகளென்று அரசாங்கத்தாற் கருதப்பட்டு அடக்கியாளப்படும் ஆசிரியர்களான ஆயிரமாயிரம சாதுக்கள் சென்ற 12-10-55 புதன்கிழமை மல்லாகத்தில் ஒன்று திரண்டு கிளப்பிய உரிமைக்குரல் ஆட்சியாளரின் கவனத்தை நன்கு ஈர்த்திருக்கும். ஆசிரியர்களின் பணிவான கோரிக்கைகளும் பரிதாபத்துக்கிடமான நிலைமையைத் தெரிவிக்கும் பேச்சுக்களும் ஆட்சிபீடத்தினதும் அதற்கு முன்மாதிரியாக நடந்து காட்டும் சில பாடசாலை முகாமைக்காரர்களினதும் கல்நெஞ்சங்களைக் கரைத்துருகி ஓடச் செய்திருக்கலாம்

### ஓர் அதிர்ச்சி

சோமசுந்தரப் பெருமானின் முதுகிலே பட்ட பிரம்படி மதுரையம்பதி மக்கள் அனைவரினதும் முதுகில் பட்டதல்லவா? அதே போன்ற ஒரு தாக்கம் அதாவது ஆறுமாத முன்னறிவித்தலுடன் ஆசிரியரைப் பதவிநீக்கம் செய்யலாமென்ற சட்டப்பிரிவைத் துணைக்கொண்டு சுன்னாகம் – மயிலணிச் சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியர் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் உண்டான அதிர்ச்சி வடமாகாணத்திலுள்ள அத்தனை ஆங்கில, தாய்மொழி ஆசிரியர்களையும் தாக்கிவிட்டது. வட இலங்கை மட்டுமென்ன அகில இலங்கையுமே அதிர்ச்சியடைந்ததென்றால் அது மிகையாகாது.

### அநீதிக்கு எதிர்ப்பு

இந்த ஆறுமாத முன்னறிவிப்பு வேலைநீக்கச் சட்டத்தால் அஞ்சிய ஆசிரிய உலகமானது அநீதியை எதிர்த்து உரிமையைக் காப்பாற்ற ஒன்றுதிரண்டுவிட்டது. ஆசிரியர்கள் அதிலும் தாய்மொழி ஆசிரியர்கள் முதுகெலும்பற்றவர்கள்; எடுத்தார் கைப்பிள்ளைகள் என்று அடக்கு முறையாளர்கள் எண்ணிய காலமும் ஒன்றிருந்தது. ஆனால் இன்று உரிமைக்காக உயிரையும் கொடுக்க அவர்கள் தயாராகிவிட்டார்களென்ற எண்ணம் சென்றவியாழக்கிழமை பிற்பகல் சுன்னாகம் சந்தையடியிலிருந்து கிளம்பிய பிரமாண்டமான ஊர்வலத்தைக் கண்ட ஒவ்வொருவர் மனதிலும் தோன்றியிருக்கும்.

### ஊர்வலம்

இலட்சியக் கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கி ஆசிரியர்கள் மட்டுந்தானா சென்றார்கள்? ஆண்களுக்கு நாங்கள் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்லவென்பதைக் காட்டப் பெண்மணிகளும் பெருந்தொகையாகப் பெருமிதத்துடன் அணிவகுத்துச் சென்றார்கள். குறிப்பிட்ட சட்டவிதிக்குப் பலியான ஆசிரியர் திரு. நடராசா முன்செல்ல அவரைத் தொடர்ந்து இரு வரிசையாக ஆண்களும் பெண்களும் அட்டைகளை ஏந்திய வண்ணம் செல்ல அதற்குப் பின்னே அனுதாபிகள் திரளாகப் போய்க்கொண்டிருந்த காட்சியானது யாழ்ப்பாணம் இன்றுவரை கண்டிராத இரண்டாவது காட்சியாகும். (முதலாவது அணிவகுப்புக் காட்சியைக் காரைநகர் ஆசிரியர் திரு பொன்னம்பலம் வேலைநீக்கம் செய்யப்பட்டபோது பார்த்திருக்கலாம்.) இந்தப் பிரமாண்டமான ஊர்வலத்தின் மத்தியில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட மோட்டார்வாகனமொன்று ஆசிரியர்களின் சோக சரிதையை அழகாக எடுத்துச்சொல்லிக்கொண்டு சென்றது. ஆயினும் உணர்ச்சிவசப்பட்டுப் போலும் அக்குரல் அவ்வப்போது அரசாங்கத்தின்மீதும் முட்டி மோதிக்கொள்ளப்பார்த்தது.

### மாபெருங் கூட்டம்

ஊர்வலமானது சுமார் ஒரு மைல் தூரம் சென்று மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் முன்றிலை அடைந்தது. அங்கு நடந்த பகிரங்கக் கூட்டத்துக்கு வலிகாமம் வடக்குத் தமிழாசிரிய சங்கத்தலைவர் திரு. ரி. துரைரத்தினம் தலைமை வகித்துக் குறித்த சட்டத்தின் கொடுமையையும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

பொதுவாக ஆசிரியர்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் அவர்களிடையே பல்வேறு பிரிவுகளும் பிரிவான சங்கங்களும் இருப்பதைக் காணலாம். இந்தப் பிரிவினை அதிலும் தாய்மொழி ஆங்கில ஆசிரியர்களுக்கிடையில் ஏன் ஏற்பட்டது? ஒற்றுமை யேற்படுமா என்பனவற்றை ஆராய்ந்தால் அது விரியும். ஆனால் அவர்களின் ஒற்றுமையின்மை பெலவீனத்துக்குக் காரணமாகுமென்பதைக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். ஏச். பேரின்பநாயகனும் நீண்ட நாட்களாகவே உணர்ந்திருந்தார். ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்திப் பேசிய அவர் அது குறித்து வட இலங்கை ஆசிரிய சங்கமும், வட இலங்கைத் தமிழாசிரிய சங்கமும் ஆலோசிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். ஆசிரியர்களின் குரலுக்கு அதிகாரவர்க்கம் மதிப்புக் கொடுக்கும் நிலைமை யேற்பட்டால் சிக்கல்கள் தீர்ந்துவிடுமென்பதே அவரது முக்கிய வற்புறுத்தலாகும். அந்த நிலைமை எப்படி உருவாக்கப்படலாம் என்பதைப் பின்னாற் பேசிய பேச்சாளர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிடத் தவறவில்லை.

### 'கருங்காலிகள்'

திரு. நடராசா தலைமையாசிரியர் பதவியை இழந்தாலும் அப்பதவி இன்று இன்னொரு ஆசிரியரால் நிரப்பப்படாமல் விடப்படவில்லை. அந்த நிலைமையை மனதிற் பதித்துக்கொண்டு வருத்தப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. எஸ், கனகரத்தினத்துக்குக் 'கருங்காலி'களின் தன்மை நினைவுக்கு வந்துவிட்டது. ஆசிரியர்களின் மத்தியிலுள்ள கருங்காலிகள் அத்தனைபேரும் மேடைக்குவந்து தவறுக்கு மன்னிப்புக் கேட்டுவிடுவார்களோ என்ற எண்ணம் ஆசிரியர் திரு. ம. சத்தியமூர்த்தி பேசும்போது தோன்றியது.

ஆறுமாதத்தில் வேலை நீக்கும் சட்டத்திலுள்ள சிக்கல்கள். அதற்குக் கொடுக்கப்படும் வியாக்கியானம் இப்போது உருவாகியுள்ள சூழ்நிலையென்பனவற்றை இவ்விவகாரங்களில் அனுபவமுள்ள முன்னாள் அ. இ. த. ஆ. சங்கத் தலைவர் திரு. என். தம்பிரத்தினம் ஆசிரியர், ஏ. இ. தம்பர் ஆகியோர் விபரமாய் எடுத்துச் சொன்னார்கள். திரு. வ. நடராசா சம்பந்தப்பட்ட நிலைவரங்களும் அவற்றின் இன்றைய நிலையும் எவையென்பதை திரு. தம்பிரத்தினத்தின் பேச்சுத் தெளியவைத்தது. இங்கிலாந்தைப்போல் இலங்கையிலும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தொகை சனப்பிரதிநிதிகள் சபையில் அதிகரித்தாலே என்று திரு. தம்பர் ஆசைப்பட்டார்.

### பதவி நீக்கம்

கூட்டத்தில் அ. இ. த. ஆசிரிய சங்கத் தலைவர் திரு. வ. சுப்பையா, திரு. எம். பொன்னம்பலம் ஆகியோரும் பேசினர், திரு. நடராசா தான் பதவி நீக்கம்செய்யப்பட்ட சோக சம்பவத்தைத் தன் மான உணர்ச்சி குன்றாமல் எடுத்துச் சொன்னார். அங்கு ஆசிரியர் ஒருவர் பாடிய இலட்சிய கீதம் சற்றுச் சோர்வுற்றிருந்த ஆசிரியர்களையும் தட்டிக்கொடுத்து உணர்ச்சி முறுக்கேற்றியது.

ஆசிரிய உலகமானது அச்சமின்றி ஒன்றுதிரண்டு உரிமைப்போரில் இறங்கியிருக்கும் இக்காட்சி ஆட்சியாளரின் காதுகளுக்கும் நிச்சயமாக எட்டவேண்டியது அவசியமாகும். ஆனால் அங்கு அரசாங்க ஆதரவுள்ள அரசியத் தலைவர்கள் எவரையுமே காணவில்லை. செனேட்டர் பி. நாகலிங்கம் அவர்கள்மட்டும் ஆசிரியர்களுக்கு உணர்ச்சிமிக்கவகையில் சுவையாகப் பேசினார். அவரும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. என்னதானிருந்தாலும் ஆசிரியர்களின் ஒன்றுபட்ட சக்திக்கு அரசாங்கம் அடிபணியும் காட்சி இனி அதிகதூரத்திலில்லை என்பது மட்டும் உண்மையாகும்.


வித்தியா பிரசுர சபையினரால்
அங்கீகரிக்கப்பட்ட

**கணித புத்தகங்கள்**

ஆறும் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். ஸி. வகுப்பு வரையும் தொடர்ந்து கற்கக்கூடிய முறையில் இலகுவான தமிழ் நடையில்

பரமேஸ்வர (தமிழ்) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கணிதப் பேராசிரியராய் இருந்தவரும் பரமேஸ்வரக் கல்லூரிக் கணித விஞ்ஞானப் பகுதிப் பிரதம ஆசிரியராயிருப்பவருமாகிய
திரு. ச. சிதம்பரப்பிள்ளை B. A., B. Sc. (Lond)
அவர்களால் எழுதப்பட்டவை.

| | |
|---|---|
| 1. எண் கணிதம் | 2-75 |
| 2. கேத்திர கணிதம் | |
| 1ஆம் புத்தகம் | 3-00 |
| 2ஆம் ,, | 2-50 |
| 1ஆம், 2ஆம் புத்தகங்கள் | 5-00 |
| 3. அக்ஷர கணிதம் | |
| 1ஆம் புத்தகம் | 3-00 |
| 2ஆம் ,, | 3-00 |
| 1ஆம், 2ஆம் புத்தகங்கள் | 5-50 |

எல்லாப் புத்தகசாலைகளிலும்
விற்பனைக்கிருக்கின்றன.



### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10467

பெரியவிளான்

யோசெவ் அல்பிறெட் கைம் பெண் அருளம்மா காலம் சென்ற அல்பிறெட்டின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் 1311ஆம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவக்காரியாக
வழக்காளி

பெரியவிளான்

1. செல்லர் கதிரவேலுப்பிள்ளை
2. பெண் விசாலாட்சி

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 10467ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1955ஆம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 12ஆந் திகதி (12-11-55) சனிக்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்றுபிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:—** முதல் வட்டி ரூபாய் 1227–50ம், இதில் ரூபாய் 750/க்கு 28–10–53 திகதி தொடக்கம் 16–2–54 திகதி வரைக்கும் 100க்கு 10வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவும். இதில் ரூபா 500/ம் மேலும் கோட்டுச்செலவில் ரூபா 100/ இறுபட்டது.

**காணியின் விபரம்**

வடமராணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பெரியவிளானிற் மூல்லாக்தன் சீமாவும், குற்றைஆண்டி சீமாவும்" நிலப்பரப்பு $2\frac{7}{8}$ம் வீடுகளும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை: கிழக்கு, செல்லப்பா பெண் செல்லம்மாவின் ஆதனம், வடக்கு இளையதம்பி தம்புவின் ஆதனம், மேற்கு இளையதம்பி வயிரமுத்தவுக்கும் பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனம், தெற்கு தம்பையா காசிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் வஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசத்துக்குமுரிய ஆதனம் இதடங்கலும், இன்னும் வடக் கெல்லைக் காணியின் மேற்கெல்லையருகாக இக்காணிக்கு 6முழ அகலமுள்ள பாதையுரித்தும், இன்னும் தென்மேற்கே தூரவையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காலும்,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை 26–9–55



### கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம்

1. சின்னையா அப்புத்துரை
வழக்காளி

சுளிபுரம்

1. ஆறுமுகம் முருகர்
2. சுப்பர் கந்தையா
3. மாரிமுத்து ஆறுமுகம்
4. எஸ். கந்தர் ஆறுமுகம்
5. கந்தர் ஆறுமுகம்
6. நல்லதம்பி சின்னத்துரை
7. இராமலிங்கம் சதாசிவம்
8. சின்னவி ஆசை
9. கந்தர் நாகமுத்து
10. கே. ஆறுமுகம் கைம் பெண்மாரிமுத்து வழக்காளிகள்


யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 10612ஆம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1955 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆந் திகதி(5-11-55) சனிக்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:—** ரூபாய் 3692/உம் இதில் ரூபாய் 3000/க்கு 7–12–53 திகதி தொடக்கம் 9–6–55 திகதி வரைக்கும் 100க்கு 7வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 387–74 சதமும்.

**காணியின் விபரம்**

சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை புளியன்துறையும் எழுமுட்கட்டுவமும் நிலப்பரப்பு 480 பனைகளும், தென்னை மரங்களும் எல்லை: கிழக்கு, எதிராளிக்களுக்குரிய ஆதனங்கள்; வடக்கு சங்கரப்பிள்ளை சிற்றம்பலத்துக்குரிய ஆதனம், வயிரமுத்து பெரியதம்பிக்குமுரிய ஆதனம், மேற்கு முடிக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கையும் தண்ணீர் ஓடும் வாய்க்காலும், இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிஷனர்
சித்தங்கேணி, 5-9-1955.



# கொழுகொம்பு

வ. அ. இராசரத்தினம்

## அத்தியாயம் 14

செல்வராஜன் திருகோணமலையிலிருந்து வீட்டுக்குத்திரும்பி வந்தபோது ஐந்துமணிக்குமேலாகி விட்டது. உள்ளமும் உடலும் சோர்ந்துபோய் வந்தவன், வீட்டினுள்ளே அடியெடுத்து வைத்தபோது வீட்டிலே ஓர் அசாதாரணமான அமைதி நிலவியிருப்பதைக் கண்டான்.

சாதாரணமாகக் கிராமத்து வீடுகள் இந்த நேரந்தான் கலகலப்பாக இருக்கும். காலையில் எழுந்தால் மூன்று மணிவரையில் கிராமப் பெண்கட்குத் தோட்டத்திலும் அடுக்களையிலுமாக ஒரே வேலையாக இருக்கும். இந்த வேலைகளினால் அலுப்படைந்தவர்கள் உச்சிவெய்யிலிலும் சில்லென்று குளிர்ந்து கொண்டிருக்கும் சிமெந்துத் தரையிலே, முந்தானையை விரித்துக் கொடுங்கையிற் தலையை வைத்துக் கொக்கைப்போல ஒரு சிறு தூக்கம் தூங்கி எழுந்துவிட்டார்களானால், அதன்பின் முகத்தை அலம்பி வெற்றிலையைச் சுவைத்தபடியேவிளக்கேற்றும்வரையிலும் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்

செல்வம் வீட்டிற் புகுந்தபோது இந்தச் சுவாரஸ்யமான பேச்சைக் கேட்க முடியவில்லை. இயல்பாகவே சிவந்த உதடுகளைத் தாம்பூலத்தால் மேலும் செம்பவளமாக்கிக்கொண்டு இலட்சுமீகரமாகத் தோன்றும் எந்த முகத்தையும் காணவில்லை.

கனகம் என்றைக்கும் தன் வீட்டையும் பொருள்களையும் ஒழுங்காகவே வைத்திருப்பாள். பொருள்கள் எல்லாம் அதனதன் இடத்தில் வைக்கப்பட்டு, அந்த ஒழுங்குமுறையினால் அந்த வீடே ஒரு கலையழகோடுதான் இருக்கும். ஆனால் இன்றைக்கு, முன் விருந்தையில் இருந்த கதிரைகள் மேசைகள் எல்லாமே முதல்நாள் இராத்திரிப் படுக்கைக்குப் போகும்போது என்ன நிலையில் இருந்தனவோ அந்த நிலையில் ஒழுங்கற்றுக் கிடந்தன. காலையிலிருந்து கூட்டப்படாததுபோல நிலமெல்லாம் தூசும் துரும்புமாகக் கிடந்தன. மேலே சுவரிலிருந்த நடராஜர் படத்திற்குக் கூட அன்றைக்குப் பூ வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆடிய பாதனின் காலடியிற் கிடந்து நசுங்கும் குழந்தையைப்போல நேற்று வைத்த பூக்கள் படத்தின் காலடியிலே நசுங்கிக் கிடந்தன.

செல்லன் ஒருகணம் யோசித்தான். எல்லாம் நடராஜன் போனதன் விளைவாகத்தான் இருக்கும் என்று அவன் மனம் சொல்லிற்று வீட்டிலுள்ளார் இருக்கும் கலவரமான நிலையை மேலும் கொந்தளிக்கப்பண்ணாமல் 'தான் நடராஜனைத் திருகோணமலையிற் சந்தித்து அவனைச் சமாதானமாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்ததாகப் பொய் சொல்லவேண்டும்' என்று அவன் தீர்மானித்துக்கொண்டே விருந்தை மூலையில் கதவு நிலையில், கயிற்றில் தொங்கும் மாவிலைகளைப் போல் காய்ந்து சுருங்கிப் போய்ப் படுத்திருந்த தன் தாயாரை 'அம்மா!' என்று எழுப்பினான்.

தன் அண்ணனின் குரலைக் கேட்ட கனகம் அறைக்குள்ளிருந்து வெளியே வந்தாள். ஆடிக் காற்றிலடிபட்டு மெலிந்த இதரை வாழைக் குலையைப்போல அவள் களையிழந்து தோன்றினாள். அவள் முகத்திலே ஒரு வாட்டம். கை கால்களிலே ஒரு சோர்வு. ஆனால் வெளிறிப் போயிருந்த அவள் நீண்ட கண்களில் மட்டும் 'அண்ணன் என்ன சொல்லப்போகிறார்' என்பதை யறியும் ஆவல் தேங்கி நின்றது. "அண்ணன் சொல்லுவது நல்லதாக இருக்கவேண்டும்" என்று கனகம் மௌனமாகப் பிரார்த்தித்தாளோ என்னவோ; தன் கண்களில், ஏன், சர்வாங்கமுமே பொங்கியெழும் ஆவலை வார்த்தைகளாக்கிக் கேட்கக் கனகத்தினால் முடியவில்லை. அவளைப் பார்க்கையிற் செல்வத்திற்கு அழவேண்டும் போல இருந்தது.

இதற்குள் அவன் தாயார் திடீர் என்று எழுந்து கண்ணைக் கசக்கிக்கொண்டே 'இப்போதான் வருகிறாயா?'

"ஆம், அம்மா! அப்பா எங்கே?"

"இவ்வளவுநேரமும் பைத்தியம் பிடித்தவரைப் போல இங்கேதான் இருந்தார். நானும் இப்போதான் கண்ணயர்ந்தேன். ஏன்? அவர் இங்கே இல்லையா?" என்றாள்.

"காணவில்லையே" என்றான் செல்வன்.

கனகத்திற்கு ஆத்திரமாக இருந்தது. வந்த அண்ணனிடம் அம்மா "நடராஜாவைக் காணவில்லையா? என்று கேட்காமல் ஏதேதோ எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறாளே. அண்ணனும் நடராஜனைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் அப்பாவைப்பற்றிக் கேட்கிறாரே" என்று அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது. அவளாற் பொறுக்க முடிமற் போகவே, 'அண்ணா நடராஜனைக் கண்டீர்களா?' என்று கேட்க விரும்பினாள் கனகம். ஆனால் அதற்கும் அவளுக்கு நாணமாயிருந்தது. ஆகவே அவள் கணத்தை வருடங்களாக்கித் தவித்தாள்.

"தம்பி நடராஜாவைக் கண்டாயா?" என்று தாயார் கேட்டபோது கனகத்தின் தவிப்பு அடங்கியது. அண்ணா என்ன சொல்லப்போகிறார் என்பதை அறியும் ஆவலோடு சிலைபோல நிற்கையில், "ஆம் அம்மா! திருகோணமலையில் அவனைக் கண்டேன். இப்போது சமாதானமாகத்தான் கொழும்புக்குப் போகிறான்" என்றான்.

### அபசகுனம்

தாயார் நீண்ட பெருமூச்சு விட்டாள். மணித்தியாலங்களாகச் சுவாசத்தையே தடைப்படுத்திக் கொண்டு உள்ளத்தை நிறைத்து நின்ற பாறுங்கல் ஒன்று அப்படியே காற்றாக மாறி வெளிவந்ததைப் போல இருந்தது. மனத்தை இலேசாக்கிக் கொண்டதும் மறுபடியும் கேட்டாள்: "ஏன், நீ இன்றைக்குத் திருகோணமலையில் நின்று அவனை ரெயிலில்ஏற்றிவிட்டு வந்திருக்கலாமே!"

செல்லத்துக்கு இந்தக் கேள்வி திகைப்பைக் கொடுத்தது: ஏனென்றால் அவன் ஒரு பொய் சொல்லவேண்டும் என்று எண்ணியிருந்தானே தவிர, சொல்லிய அந்தப் பொய்யையே உண்மையாக்க மேலும் எத்தனை பொய் சொல்ல வேண்டும் என்று அவன் திட்டப்படுத்தவில்லை! என்றாலும் அந்தத் திகைப்பைச் சமாளித்துக்கொண்டு சொன்னான்: "நின்று அனுப்பி விட்டு வந்திருக்கலாந்தான். ஆனால் என்னிடம் ஒரு சாரம்கூட இல்லை. உடுத்த உடுப்போடு போன நான் தானே; அதனாற்தான் வந்துவிட்டேன்."

அவன் சொல்லியது சரியென்றே தாய்க்குப் பட்டது. ஆனாற் கனகத்திற்கோ சந்தேகமாகத்தானிருந்தது. "ஓடிப் பறந்து திருகோணமலைக்குப் போனவர் ஏன் ரெயில் புறப்படும் வரை நின்று வராமல் திரும்பி வந்துவிட்டார்?" என்று தானே தன்னைக் கேட்டுக்கொண்டாள். பற்றிப் படரும்கொடி, கிட்ட இருப்பது பச்சை மரமா பட்ட மரமா என்று எண்ணிப் பார்ப்பதில்லை. அதனாற் படராமலும் இருக்க முடியாது. மனமும் இப்படித்தான். அதனால் எதையாவது எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. தாயுமானவர் பாடியிருப்பது போல அதற்குச் 'சும்மா இருக்கின்ற திறன்' கிடையவே கிடையாது. கனகத்தின் மனக் கொடிகளும் 'சும்மா இருக்க முடியாமல்' படருகையில், சில நாட்களாகத் தன்னுள்ளத்துள்ளே ஊன்றி நாட்டம்பெற்றிருந்த சந்தேகம் என்னும் கொழுகொம்பின் மேற்தான் படர்ந்தது. அதைத் தடுக்க அவளாலேயே முடியவில்லை.

கனகம் யோசித்தபடி நிற்கையில் செல்லன் வீட்டுக்குள்ளாக நடந்து பின்புறமாகப் போனான். திறந்துகிடந்த அடுக்களையைப் பார்த்தபோது அவனுக்குப் பகீர் என்றது. அங்கே நெருப்பே மூட்டப்படவில்லைப்போல இருந்தது. நடராஜனின் போக்குத் தன் குடும்பத்தில் எவ்விதமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்று அப்போதுதான் அவனாற் பூரணமாக உணர முடிந்தது. ஆம், நடராஜன் போனதோடு அவன்வீட்டின் கலகலப்பும் போய்விட்டது. மகிழ்ச்சி போய்விட்டது. குடும்பத்தினர் எல்லார் உள்ளத்திலும் இருந்த பெருமிதம் போய்விட்டது. அதுமட்டுமா? 'பசி வந்தாற் பத்தும் பறக்கும்' என்று பாடியவரைத் தன் தோல்வியை ஒப்புக்கொள்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918ஆம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 இலட்சம் ரூபா

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்

ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப் பணம் கட்டுமுறை:
மாசமொன்றக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றக்கு 100 ரூபா திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதிசராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள ''நாஷனல்'' வங்கியிலும் ''இம்பீரியல்'' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[A169]



## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு 4961ஆம் இலக்க வழக்கில் 1955ஆம் ஆ. ஆவணி மீ 31 திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1955ஆம் ஆ. கார்த்திகை மீ 17ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னால் காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

வல்லுவெட்டி
ஆறுமுகம் கந்தையா
வழக்காளி

திருகோணமலை 1ஆம் டிவிஷன் கிறீன் றோட்டு
பெருமாள் துரைசாமி எதிராளி

அறவிடவேண்டிய தொகையின் விபரம்

தாட்டு ரூபா 1164. தீர்வை வரையில் வட்டி ரூபா 36. மொத்தம் ரூ. 1200. தீர்வைத்திகதியிலிருந்து 30-8-55 வரைக்கும் வட்டி ரூ. 32-33. கோட்டுச் செலவு ரூ. 199-80 மொத்தம் ரூபா 1432-13

ஆதன டாப்பு

1. யொலிகண்டிக் குறிச்சியிலுற, முடவேப்பங்கன்றடி. இது 1952ஆம் ஆ பங்குனி மீ 24ஆம் திகதி 1127ஆம் இலக்கத்தில் விற்றாளிக்கப்பட்டு பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு 3910ஆம் இலக்க வழக்கில் அனைக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 8, குளி $2\frac{20}{32}$. இதில் சொல்லப்பட்ட படத்தில் 3ஆம் துண்டுக்கு நிலப்பரப்பு 2, குளி $17\frac{7}{32}$. எல்லை: கிழக்கு, சின்னையா கந்தவனத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, வி. மயிலன் பெண் நாகம்மாளுக்கும் மறுபேருக்கும், விக்கந்தன் பெண் வள்ளிகளுட்டிக்கும் மறுபேருக்குமுடைய 1ஆம், 2ஆம் துண்டுகள். மேற்கு எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய 10ஆம் துண்டு. தெற்கு, மாரிமுத்து லாசறஸ் பெண் ஞானம்மாவுக்குடைய 4ஆம் துண்டு. இது முழுவதும்.

2. மேற்சொல்லிய ஆதனத்தில் சொல்லப்பட்ட 1127ஆம் இலக்கப் படத்தில் 5ஆம் துண்டுக்கு குளி $9\frac{19}{32}$ எல்லை: கிழக்கு, சின்னையா கந்தவனத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, மாரிமுத்து லாசறஸ் பெண் ஞானம்மாவுக்குடைய 4ஆம் துண்டு. மேற்கு, 10ஆம் துண்டு. தெற்கு, சுவாம்பிள்ளை பெண் தங்கம்மாவுக்குடைய 6ஆம் துண்டு. இது முழுவதும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு 6-10-1955

[A227]

# மா. பீதாம்பரம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரமுற நின்றுசிவ ஞானமத வேழமாய்
விங்குமனு வாட்டு மன்று
வீரேசு வரநாத வவதார புருஷனுய்
மிளிர் விவே கானந்தனே.

அவர் சிறுவர்களுக்காகப் பாடிப் பரிசுபெற்ற பாடல்களுள் "அம்புலி அம்புலி வா. வா. வா" என்ற பாட்டு இன்றளவும் நின்று நிலவுகின்றது. இருபது வருடமாக எத்தனையோ குழந்தைப் பாடல்கள் வந்தும் அதன், இடத்தை அசைக்க முடியவில்லை. அபிநயத்திற்கேற்ற சொற்கள் அழகாக அமைந்திருக்கும் அந்தக் கவிதை,

"மேகம் மேகம் மறையாதே
அம்புலி மானை மறையாதே"

என்று முடியும்போது ஒரு சபாஷ்! சொல்லத் தோன்றுகிறது. தாய்மொழி, இலங்காதேவி, தொன்மாவிலங்கை என்பனவும் நல்ல பாடல்களே. சரித்திரக்கதைப் பாட்டுகளும் ஆசிரியர்கள் உபயோகிக்கத் தகுந்தன என்பதில் ஐயமில்லை,

கவிதைகள் மாத்திரமன்றி ஏராளமான கட்டுரைகளும் அவர் எழுதியுள்ளார். 'விவேகானந்தன்' என்று ஒரு பத்திரிகை நடந்தது உங்களுக்குத் தெரியுமா? கொழும்பு விவேகானந்தசபையாரால மாதமொருமுறை விபுலாநந்த சுவாமிகளை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பட்டது அது. 1925ஆம் ஆண்டிலே வெளிவந்த முதலாம் பத்திரிகையிலேயே பீதாம்பரம் அவர்களை நாம் சந்திக்கிறோம். தொடர்ந்து 'வித்தியா சமாச்சாரப் பத்திரிகை'யில் அவர் அருமையான விஷயங்களை எழுதினர். 'ஈழகேசரி'யில் அவருடைய தொடர்பு யாவரும் அறிந்ததே.

அன்பே சிவம், சைவக் கவி, தமிழ்ப் பகவத்கீதை, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், வளர்ந்தோர் கல்வி இயக்கம், யாப்பியற் சுருக்கம், எண்பற்றிய கட்டுரை வீசகணிதம், கேத்திரகணிதம், நாடகச் சுவடிகள், நாட்டியற் கல்விமுறை என்பன அவர் எழுதிய நல்ல கட்டுரைகள்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை வித்தியாசாலையின் உபாத்தியாயராயிருந்த ஸ்ரீமான் வை. விசுவநாதரால் இயற்றப்பட்டு 1855ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வீசகணிதத்தினைப் புதுக்கியும் கூட்டியும் விளக்கியும் எழுதி 1939 பங்குனி தொடக்கம் வித்தியா சமாச்சாரப் பத்திரிகையில் அவர் எழுதியது மிகவும் உபயோகமானதாகும். அப்படியே யாப்பியற் சுருக்கம் என்பதையும் எண்பற்றிய கட்டுரையையும் எழுதியது போற்றக்கூடியதே.

நாடகமென்பது யாது என்பதை நன்கு விளக்கியும், சொக்கம், மெய்க்கூத்து, அவிநயக்கூத்து, நாடகம் என்பன நாடக வளர்ச்சியின் நான்கு படிகள் என்பதைக் காட்டியும் எழுதிய 'நாடகச் சுவடிகள்' என்ற கட்டுரையில் நமக்குத் தெரியாத பழங்கால நாடகச் சுவடிகளின் பெயர்களை அவர் கூறும்போது நாம் பிரமிக்கிறோம். மட்டக்களப்புப் பகுதியில் இருக்கும் அநிருத்த நாடகத்தைப்பற்றி விமர்சனம் செய்து, "பழந்தமிழ் நாடக நூல்களைப் பரிபாலனஞ்செய்வதோடு அவற்றைப் பண்டை முறைப்படி நடிக்கப் பயின்றுகொள்வதும் இன்றியமையாதது" என்று முடித்திருக்கும் அக்கட்டுரை மிகவும் சிறந்ததென்பதில் ஐயமில்லை.

வளர்ந்தோர் கல்வி இயக்கம் சீனதேசத்தில் எப்படி நன்மையைக் கொடுத்தது என்பதை விளக்கியும், அது எங்கே எப்படித் தொடங்கப்பட்டதென்பதையும் குறிப்பிட்டு இலங்கைக்கு அது மிகவும் அவசியமானது என்பதை வற்புறுத்தி அவர் எழுதிய வளர்ந்தோர் கல்வி இயக்கம் என்ற கட்டுரையும், நாட்டியக் கல்வி முறைபற்றி எழுதிய சிறு கட்டுரையும் அவரை நினைவில் வைத்திருக்கப் போதுமானவையாகும். தமிழ்ப் பகவத்கீதையும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும் இரு கண்கள் என்பது என் அபிப்பிராயமாகும்.

சுவாமி விபுலாநந்தர்மேல் ஆசிரியரவர்கள் கொண்ட அன்பு சொல்லுந்தரத்ததல்ல. அந்த அன்பின் மேலெழுந்ததுதான் விபுலாநந்தர் வரலாறு என்ற கட்டுரையும் முத்தமிழ்ப் பேரொளி என்ற கவிதையுமாகும். அவர்கள் சுவாமியவர்களைப்பற்றி எப்படி எழுதினாலும் அறிஞர்கள் திருப்திப்படப்போவதில்லை. யாரா யாரோ வரலாறு, நினைவுமாலை என்றெல்லாம் வெளியிடும்போது சுவாமியவர்களை நன்கு அறிந்து அவரின் எழுத்தில் ஈடுபட்ட திரு. பீதாம்பரம் ஓரிரு கட்டுரைகளோடு நிற்கிறாரேயென்பதுதான் எனது துக்கம். இப்போது பளை மத்திய ஆங்கிலக் கல்லூரியில் அதிபராக இருக்கும் திரு. பீதாம்பரம் அவர்கள் இளைஞர் கணிதம் என்ற வரிசையை 2ஆம் வகுப்புத்தொடக்கம் மேல்வகுப்புகள் ஈறாக எழுதி 1928இல் வெளியிட்டவர். அவைமாத்திரமன்றி செந்தமிழ்க் கருவூலமென்ற நூலையும் மேல்வகுப்புக்குக் கொடுத்தாரென அறிகிறேன். ஞானம்பாள் என்ற அருமையான கதையையும் அவர் ஈழகேசரி அனுபந்தத்தில் வெளியிட்டார். உபவாசிப்புப் புத்தகமாக உபயோகிக்கக்கூடிய அது இன்னும் நூல் வடிவில் வெளிவரவில்லை, ஏனோ?

முஸ்லீம் புலவர் சம்பந்தமாகச் சமீபத்தில் வெளிவந்த நூல் ஒன்றுக்கு அவர் எழுதிய விமர்சனத்தைக் கண்டு இலக்கிய இரசிகர்கள் மகிழ்ந்தார்கள். திரு. பீதாம்பரமவர்கள் எழுதும் விமர்சனத்தில் நிச்சயமாகப் பழைய நூல்களின் பெயர்களோ மேற்கோள்களோ இருக்கும் என்று வாசகர்கள் எதிர்பார்ப்பதுண்டு. அவ்வளவு நூல்கள் அவரிடம் இருக்கின்றன எனக் கேள்வி. இருந்துமென்ன? அவரை நீடித்து நினைவுறுத்தக்கூடிய உருப்படியான ஏதாவதொன்றைச் செய்ய வேண்டுமென்பது அறிஞர்களின் அவாவாகும்.

— காரைக் கவி கந்தப்பனூர்

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு 4318ஆம் இலக்க வழக்கில் 1955ஆம் ஹூ ஆவணிமீ 5ஆம் திகதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1955ஆம் ஹூ கார்த்திகை மீ 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற்காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்னால் பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

### விபரம்

அம்பனை
விஞசித்தம்பி கைம்பெண் வேலாச்சிப்பிள்ளை தனக்காகவும் பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 273ஆம் இலக்க வழக்கில் மரணசாதனத் தத்துவகாரி என்ற வகையிலும்
வழக்காளி

அல்வாய் மேற்கு
ஆ. வல்லிபுரம் நமசிவாயம்
எதிராளி

### அறவிடவேண்டிய தொகையின் விபரம்

வருமதி ரூபா. 1810. 27-5-54 தொடக்கம் 6-10-54 வரைக்கும் ரூபா 100க்கு 8வீத வட்டி ரூ.14-35. 6-10-54 தொடக்கம் 5-8-55 வரைக்கும் ரூபா 1824-35க்கு 5வீத வட்டி ரூ76. கோட்டுச்செலவு ரூ. 212-10. மொத்தம் ரூபா 2112-45

### ஆதனடாப்பு

அலவாய் மணிவீரவாகுதேவன் குறிச்சியிலுறை கொடுவாத்தெணி நிலப்பரப்பு 120. டிெ கொடுவாத்தெணி நிலப்பரப்பு 26. டிெ தோட்டம் 2. கொடுவாத்தெணி கொம்மர் ரேவித் கொள்வீலை நிலப்பரப்பு 8. இதில் மேற்கரைவாசிக்கு நிலப்பரப்பு 78, குளி 6. எல்லை: கிழக்கு, எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு, ரோட்டு. மேற்கு, அருணாசலம் நாகலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இதில் இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் ஆட்சிப்படி 6 தென்னைகள் கித்தமாகவும் நிலம், பனைகள், வடலிகள், கிணறுகள் அடங்கலிலும் சொரியலாய் நிலப்பரப்பு 3, குளி $16\frac{1}{2}$க்குச் சமமான $\frac{47}{940}$ பங்கு.

2. அல்வாய் மழுவராய குறிச்சியிலுறை வட்டதெணி நிலப்பரப்பு 78, குளி $3\frac{1}{2}$. இதில் கூடிப் பெற நிலப்பரப்பு 5, குளி $8\frac{1}{2}$. பனைகள் வடலிகளும், எல்லை நாலு பக்கங்களும் எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் $\frac{3}{16}$ பங்கு.

3. டிெ இறை கழுக்காவத்தை நிலப்பரப்பு $24\frac{7}{8}$. இதில் தென மேற்குப்புறமாக நிலப்பரப்பு 6 குளி $3\frac{15}{16}$ம் பனைகளும். எல்லை; கிழக்கும், தெற்கும் சிற்றம்பலம் கணபதிப்பிள்ளைக்குடைய ஆதனம், வடக்கு, சுடுகாடு. மேற்கு வேலன் கைம்பெண் சின்னவருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் $\frac{1}{6}$ பங்கு.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

1-10-1955 புலோலி கிழக்கு

இப் பத்திரிகையில் வெளியாகும் ஆங்க்கியக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்

# கிருமி கொல்லி

— சர்மன் —

தக்காளியின்தனிப்பண்பு பற்றிப் பலரறிவார்கள். ஆயினும் அத் தக்காளியிலிருந்து அண்மையில் ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற தென்பதை ஒரு சிலரேயறிவர். மனிதரையும் மிருகங்களையும் பயிர்பச்சைகளையும் பாதிக்கும் சில நோய்களைப்போக்கும் கிருமிகொல்லிமருந்தைத் தக்காளியினின்றும் உண்டாக்கலாமென்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இன்று அமெரிக்க விவசாயப் பகுதி விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் பயனாகத் தக்காளி ஒரு மருந்து தருஞ்செடியாக விளங்குகிறது. கிருமிகொல்லி மருந்து செய்வதற்குத் தக்காளிச்செடி உதவுகின்றது.

தக்காளியின் தண்டு, இலைகள் ஆகியவற்றிலிருந்து 'புசேரியம்' என்னும் பூசணம்(பூஞ்சு) பிடிக்காது தடுக்கும் கிருமிகொல்லிச் சத்தொன்றைக் கண்டுபிடித் திருக்கின்றார்கள். இத்தப்பூசணந்தான் தக்காளி முதலிய பயிர்வகைகளை யழித்துச் சேதம் விளைப்பது. இதனை யொழிக்கும் மருந்துச் சத்துக்கு 'டொமாட்டீன்' என்று பெயர், இதனை ஆராய்ந்தவர்கள் முதலில் பூசணத்தை யொழிப்பதற்கே வழிதேடினர். பின்னர் நடந்த ஆராய்ச்சியின் பயனாக மனிதருக்கும் கன்றுகாலிகளுக்கும் உண்டாகும் சில நோய்களையும் அதனால் தடுக்கலாமெனத் தெரியவந்தது. சில சருமரோகங்கள், உள்வியாதிகளைச் சுகமாக்கவும் இச்சத்து உபயோகப்படுமெனத் தெரியவந்தது. அர்ஜென்டைனாவைச்சேர்ந்த கம்பனியொன்று 'டொமாட்டீன்' சத்தைக் கொண்ட களிம்பு ஒன்றை வியாபாரத்துக்காகத் தயார் செய்கின்றது, இக்களிம்பு தண்ணீரில் கரையக் கூடியதாம். பூசணங்களினால் உண்டாகும் சரும வியாதிகளைத் தடுப்பதற்கு இது ஒரு சிறந்த மருந்தாம். இதனைப் பொடியாகவும் உபயோகிக்கலாமாம். இம்மருந்தினால் எரிச்சல், நாற்றம் என்பன ஏற்படுவதில்லையாம்.

அமெரிக்க விஞ்ஞானிகள் 'டொமாட்டின்' சத்தைக் கொண்டு புதியதொரு ரசாயனப் பொருளைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அதற்கு 'டொமாட்டிடைன்' என்று பெயர்கொடுத்திருக்கின்றனர். பின்னர் நடந்த ஆராய்ச்சியினால் 'டொமாட்டிடையினிலிருந்து 'கார்ட்டிஸோன்' என்ற மருந்து செய்யலாமெனத் தெரிந்தது. இது கீல்வாதம் முதலிய நோய்களை நீக்கும் அருமருந்தாகுமாம்.

'டொமாட்டீன்' தயார் செய்வதற்குப் பெருந் தொகையான தக்காளிகள் பயிர்செய்து விற்கலாமென்பதும் புலனாகிறது. 'டொமாட்டீன்' பற்றிய ஆராய்ச்சிகளெல்லாம் அனேகமாக முடிந்துவிட்டனவாம். அதினின்று அதைப்போன்ற 20 இரசாயனப் பொருள்கள் தயாசெய்துளராம். இவைகளும் பிணிபோக்கு மருந்துகள் தாமாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 11036

சுன்னாகம்
முத்துக்குமாரு பொன்னம்பலம்
வழக்காளி

சுன்னாகம்
1. வன்னியர் ஐயம்பிள்ளை
2. பெண் அன்னம்மா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 11036ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1955ஆம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 9ஆந் திகதி (9-11-55) புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1390/ம், இதில் ரூபாய் 1000/8-4-54 திகதி தொடக்கம் 6-7-54 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும வரைக்கும் 100க்கு 5வீத வட்டியும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று சுன்னாகமிலுறை "பளவராயன் வயல்" நிலப்பரப்பு ஐந்து (5ம்) கிழக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும். வழி வாய்க்காலும். எல்லை: கிழக்கு, பெரியார் ஐயாத்துரையின் ஆதனம். வடக்கு, எல்லுப்போலை கந்தையாவின் ஆதனம். மேற்கு கந்தையா மகன் செல்லமுத்துவின் ஆதனம். தெற்கு ஒழுங்கை, இடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer

தெல்லிப்பழை, 25-5-1955

# கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 10466

பெரியவிளான்
யோசேவ் அல்பிறெட் கைம் பெண் அருளம்மா காலஞ்சென்ற அல்பிறெட்டின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1811ஆம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவக் காரியாக
வழக்காளி

பெரியவிளான்
அறுக்காஞ்சிப்பிள்ளை சூசைப் பிள்ளை
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 10466ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1955ஆம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 12ஆந் திகதி (12-11-55) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1088-81ம், இதில் ரூபாய் 650/க்கு 28-10-53 திகதி தொடக்கம் 2-3-54 திகதி வரைக்கும் 100-க்கு 9வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 180-77 சதமும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரிய விளானிலுறை "சொக்கன் சீமா" நிலப்பரப்பு நாலு (4ம்) வீடுகளும் மற்றும் பயிர்களும். எல்லை; கிழக்கும், வடக்கும் ஒழுங்கை. மேற்கு அவுரும்பிள்ளை செபர்தீனின் ஆதனம். தெற்கு கார்த்திகேசர் வயிரமுத்துவின் ஆதனம். இடங்கலும் இன்னும் வடக்கு ஒழுங்கையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer

தெல்லிப்பழை 26-9-1955

## மாமா மறுமொழி

க. சதாசிவம் (909)
மருமகனே! உமது பத்திரிகை வளர்க.


வே. த. சண்முகவேல் (126)
உமது கவிதைகள் கிடைத்தன. அவற்றில் ஒன்று இம்முறை வெளியாகியுள்ளது.

க. காந்தமலர் (1309)
உமது 'நான் கண்ட கனவு' கிடைத்தது. பார்வையிட்டுத் தகுதியானதாயின் பிரசுரிப்பேன்.

## ஆருயிர்த் தோழன்

மு. சிவபாலபிள்ளை (1039)

ஓர் ஊரில் கந்தன் வேலன் என்னும் இரு நண்பர்கள் இருந்தார்கள். கந்தன் தீய பழக்கங்கள் உடையவன். வேலனிடம் அக்குணங்களில்லை. குணம் வேறுபட்டிருந்தாலும் இருவரும் பூவும் மணமும் போல ஒற்றுமையாய் இருந்தார்கள். கந்தனின் தீய பழக்கங்களைச் சிறிது சிறிதாக வேலன் குறைத்து வந்தான். இருவரும் ஒன்றாகவே பாடசாலைக்குச் செல்வார்கள். ஒருநாள் வேலன் தாமதித்துவிடவே கந்தன் தனியாகவே பாடசாலைக்குச் சென்றான். செல்லும் வழியில் ஒரு தோட்டத்தில் பெரும் பெரும் கொய்யாப் பழங்கள் காய்த்திருந்தன. அவைகளைக்கண்டதும் கந்தனின் வாயில் ஜலம்ஊறியது. மெதுவாக வேலியைக் கடந்து மரத்தில் ஏறினான். இதைக்கண்ட தோட்டக்காரன் கந்தனைப் பிடித்துச் சென்று ஜமீன்தார் முன்னிலையில் விட்டான். கந்தனைப் பிடித்துக்கொண்டு போவதை வேலன் கண்டுவிட்டான். வேகமாக ஜமீன்தாரிடம் சென்று "ஐயா! நான் கொய்யாப்பழம் பறித்ததற்கு மன்னிக்க வேண்டும்" என்றான். அச்சமயம் தோட்டக்காரன் கந்தனைப் பிடித்துக்கொண்டு வந்தான். ஜமீன்தார் தோட்டக்காரனையும் கந்தனையும் வேலனையும் விசாரித்தார். தனது நண்பனுக்காகத் தான் தண்டனையடைய எண்ணிய வேலனை வியந்தார். வேலனைப் பாராட்டிக் கந்தனை விடுதலை செய்தார். கந்தன் தான் செய்த தவறுக்குத் தண்டனையை வேலன் ஏற்கத் துணிந்ததையிட்டு அவனைத் தழுவிக்கொண்டான். "நான் ஒருபோதும் இப்படியான செயலைச் செய்யமாட்டேன்" என்று சத்தியம் செய்தான். வேலன் தனது நண்பன் நல்லவனாகி விட்டதைக் கண்டு மகிழ்ந்தான்.



# பாலர் பகுதி



அருமையான மருமக்களே!

நாங்கள் அனைவரும் விஞ்ஞானம் வளர்ச்சி பெற்ற காலத்தில் வாழ்ந்துவருகின்றோம். ஆனால் எங்கள் மூதாதையரோ எத்தனையோ இக்கட்டுக்காளாகிப் படிப்படியாகவே முன்னேறி வந்தார்கள்.

இன்று நாம் வாழ்க்கை வசதிகள் பல பெற்றுவிட்டோம். அவற்றால் எங்களுக்குப் பல நன்மைகள் கிடைத்துள்ளன. இதையிட்டு நாம் பெருமைப்படுகிறோம். இந்தப் பெருமையோடு கூடவே எங்களை ஆபத்தும் சூழ்ந்துள்ளது. நல்ல காரியங்களுக்கு வழிகாட்டியாக அமைந்த விஞ்ஞானமானது அணுக்குண்டு, சவவாயுக்குண்டு ஆதியவற்றைத் தயாரித்ததன்மூலம் மனித உயிருக்கு ஆபத்தை உண்டாக்கியுள்ளது.

யுத்தம் போன்ற இந்த ஆபத்தினின்றும் மனிதனை மீட்டு அணு சக்தியை உபயோகமான வேலைக்குட்படுத்துவதற்காகச் சமீபத்தில் உலக விஞ்ஞானிகள் ஜெனிவாவில் கூடி ஆராய்ச்சிகள் செய்துள்ளார்கள். இந்த நன்முயற்சி பலனளித்தால் நாங்கள் அனைவரும் பயமின்றிச் சமாதானமாகவும் இன்பமாகவும் வாழ முடியும்.

மருமக்களே! தீபாவளி நெருங்குகின்றது. அப்படியானால் மருமக்களுக்கான போட்டியும் நெருங்கி வந்துகொண்டுதானே இருக்கும். போட்டி விபரங்களை எதிர்பார்க்கவும்.

கேசரி மாமா

## புதிய மருமக்கள்

கலாநிதி ஸ்ரீநிவாசன் (1336) சிவனகம, சாவகச்சேரி.
ஹௌது முகமது ஹமீம் (1337) 1051, நாவாந்துறை வீதி, யாழ்ப்பாணம்.
நிர்மலா ஸ்ரீநிவாசன் (1338) சிவனகம், சாவகச்சேரி.
நிரஞ்சனு ஸ்ரீநிவாசன் (1339) சிவனகம், சாவகச்சேரி.

## உங்களுக்குத் தெரியுமா?

— த. யோகநாதன் —

579. யாழ்ப்பாண வைபவ மாலையை எழுதியவர் யார்?

580. உலகத்திலே அதிகமாக டெலிபோன் பேசும் சாதியார் யார்?

581. முத்தொள்ளாயிரம் என்ற பழந் தமிழ் நூலில் நாம இன்று காணக்கூடிய பாடல்கள் எத்தனை?

582. பட்டினவின் பழைய பெயர் என்ன?

583. கத்தோலிக்க திருச்சபையின் முதல் பாப்பரசர் யார்?

(விடைகள் 12ஆம் பக்கம் பார்க்க)

## அரசனும் அந்தணனும்

— அறிவன் —

ஒருநாளிரவு மூன்றாம் சாமம். பாண்டியன் வல்லபதேவனும், சேனாபதி வீரசேனனும் நகர் சோதனைக்குப் புறப்பட்டார்கள். மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், சிற்றில்களையும் அவர்கள் தாண்டிச் சென்றார்கள். தெருவின் இருபுறமும் கண்ணோட்டியவாறு சென்ற வல்லபதேவன் தனது பார்வையை ஒருவீட்டின் அகன்ற திண்ணையின்கண் ஓட்டினான். யாரோ ஒருவர் படுத்துறங்குவதைப் பார்த்தான். அருகிற் சென்று பார்த்தனர் இருவரும். தீவர்த்தி ஒளியில் படுத்திருந்தவரைக் கூர்ந்து பார்த்தான் மன்னவன். மார்பில் முப்புரி நூலும் நெற்றியில் திலகமும் விளங்கின. அவர் ஓர் அயலூர் அந்தணர் என்பதை அரசன் யூகித்துக்கொண்டான்.

தனது நாட்டில் உள்ளே படுத்துக்கொள்ள முடியாது, இவர் ஏன் இப்படி வெளியிலே கண்ணுறங்க வேண்டும் என வருந்திய அரசன், உடனே ஒரு சிவிகை தருவித்து, அந்தணரை அதிலேற்றி அரண்மனைக்குக் கொண்டுபோய்த் தனது சயன அறையிலேயே, ஒரு மஞ்சத்திற் சுகமாகப் படுக்க வைத்தான்.

விடியற்காலையில் விழித்தெழுந்த அவ் அந்தணர், செவிக்கினிய பாணியில் ஒரு சுலோகத்தைத் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தார். அதிலிருந்து அது ஆழ்ந்த பொருள் பொதிந்ததாயிருக்கவேண்டுமென யூகித்த மன்னன், அதன் பொருளை விளக்கிச் சொல்லத் தனது புரோகிதராகிய செல்வநம்பியை வரவழைத்தான்.

மன்னவன் அந்தணரை நோக்கி, 'சுவாமீ! அந்தச் சுலோகத்தின் கருத்தையறிய ஆவலாயிருக்கிறேன்' என, அவர், 'புரோகிதர் நம்பியே அதற்கு அர்த்தஞ் சொல்வார்; அதுவே எனக்குப் பிரியம்' என்றார். நம்பியும், 'அப்படியே ஆகட்டும்!' என்று சொல்லத் தொடங்கினார்:-

'மழைக்காலத்துக்கு வேண்டியவைகளை எட்டு மாசங்களில் தேடுகிறோம். இரவுக்கு வேண்டிய வசதிகளையும் மற்றப் பொருள்களையும் பகலில் தேடுகிறோம். வயதாகி உடல் தளர்ந்து, நரைதோன்றும் கிழப் பருவத்துக்குரிய வசதிகளை யௌவனப் பருவத்தில் தேடிக்கொள்கிறோம். அதைப்போலவே பரலோகத்துக்கு வேண்டிய புண்ணியம் என்னும் ஐசுவரியத்தை இந்த ஜன்மத்திலேயே தேடவேண்டும்'

இதனைக்கேட்ட மன்னன் தன் கைகளைச் சிரமேற் குவித்து, "ஆகா! இத்துணை அரும் பொருள் செறிந்த சுலோகமா, இது?" என்று கூறி அற்புதமும் ஆனந்தமும் ஒருங்கெய்தலானான். 'பரத்தையடையப் பரமன் பாதமே சிறந்த வழி' யெனத் தேறி, அவனடிசிந்தைசெய்திருந்தான், பாண்டிய மன்னன.

## ஆராய்வின்மை

மு. அ. மு. பாருக் (1313)

நாம் எக்காரியத்தைச் செய்யத் துணிந்தாலும் முதலில் ஆராயவேண்டும். எதையும் ஆராயாமற் செய்தால் அங்கே பல பிழைகள் ஏற்படுகின்றன.

"ஆய்ந்தோய்ந்து பாராதான் காரியம் தான்சாந் துயரம்தரும்" என்பது முதுமொழி. எதைச் செய்யத் துணிந்தாலும் நம் மனதில் இப் பழமொழியின் நினைவிருக்கவேண்டும்.

தசரதச் சக்கரவர்த்தி ஒருநாள் வேட்டையாடச் சென்றிருந்தார். அன்று அவருக்கு ஒன்றுமே அகப்படவில்லை. சோர்வுடன் திரும்பும்போது ஓர் ஒலி கேட்டுத் திரும்பினார். அவ்வொலி அருகிலிருந்த ஆற்றிலிருந்து வந்தது. உடனே மன்னன் ஓர் அம்பை எடுத்து ஒலிவந்த திசையை நோக்கி எய்தார். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, அங்கிருந்து "அம்மா, அப்பா" என்ற மனிதக் குரல் கேட்டது. மன்னன் திடுக்கிட்டார். ஆற்றருகே சென்று பார்த்தார். ஓர் இளைஞன் குற்றுயிராகக் கிடந்தான்.

அவனைத் தூக்கி மடியில் வைத்தவுடன அப் பையன் சொன்னான்: "என் பெற்றோர் பிறவிக் குருடர்கள். அவர்களுக்குத் தண்ணீர் எடுக்க வந்தேன். அவர்களுக்குத் தண்ணீரைக் கொடுக்கவும்" என்று சொல்லி உயிர் விட்டான்.

மன்னன் துக்கத்[illegible] பெற்றோரிடம் சென்று [illegible]ந்ததைச் சொன்னார். [illegible]கள் துயரப்பட்டு, "[illegible] கள் புத்திர பாசத்[illegible] இறக்கின்றோம்; அதுபோ[illegible]நீயும் புத்திர பாசத்தா[illegible] இறப்பாய்" என்று சபித்து இறைவனடி சேர்ந்தனர். அவர்களின் சாபத்தினால் தசரதர் இராமனைப் பிரிந்தபோது துயரந்தாங்காது இறந்தார்.

ஆகவே நாம் எக்காரியத்தைச் செய்யினும் முதலில் ஆராய்ந்து தெளிந்த பின்புதான் செய்தல் வேண்டும். ஆராய்ந்து நாம் செய்தால் அதனால நற்பலன் கிடைக்குமேதவிர நஷ்டம் ஏற்படாது.

## எல்லாம் 'ட்டு'

— வே. த சண்முகவேல் —

அம்மா அவிப்பது பிட்டு
ஆசிரியர் தருவது குட்டு
இதமான பணியாரம் லட்டு
ஈழத்தை இந்தியாவுடன் ஒட்டு
உயர்ந்தோர் அணிவது பட்டு
ஊராருக்கு உபதேசம் ஊட்டு
எல்லோரும் விரும்புவது பாட்டு
ஏட்டில் இருப்பது நாட்டு
ஐந்தும் மூன்றும் எட்டு
ஒன்றும் அரையும் தூட்டு
முற்றம் நித்தம் கூட்டு
பிணைத்து வைப்பது பூட்டு
காயம் பட்டாற் கட்டு
துப்பாக்கி தீர்வது வேட்டு
பொருள்கள் வைப்பது தட்டு.

### விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி

கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னுகம்.

அன்புள்ள மாமா,

தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி-பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ____________________

விலாசம்: ____________________

____________________

பிறந்த திகதி ____________________

____________________
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

T'Phone No. 805

Registered at the G. P. O. as a Newspaper

26TH YEAR OF PUBLICATION

EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
Largely Circulated in Ceylon, India, Burma, Federation of Malaya & Singapore
Founder: N. PONNIAH

Vol. 26 | Chunnakam Sunday Oct. 16, 1955 | No. 16

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ.6.00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி ச. 10. காசு 10

# கொழுகொம்பு

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும்படி நிர்ப்பந்தித்து அவ் வீட்டிற் பசியே பறந்து போய்விட்டது!

அப்படியானல், இழவு விழுந்த வீட்டைப்போலச் சூன்யமாகக் கிடந்த அந்த வீட்டின் எல்லா இன்பத் துக்கும் நடராஜன்தான் காரணமா? கனகம் கலங்கினுல் அதற்குக் காதல் என்று காரணம் சொல்லலாம். ஆனுல் அந்த வீட்டின் ஒவ்வொரு மனிதனும் மனுஷியும் நீரின்றி வாடிக் கிடக்கும் பயிர்கள்போலத் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருப்பது ஏன் என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஏன்? தானே நடராஜனுக்காக இத்தனை கவலைப்படுவது அவனுக்குப் புதிராகவே இருந்தது.

அப்போது அவன் தகப்பனுர் அங்கே வந்தார். அவரின் நடையிலே மிடுக்கு இல்லை. முகத்திலே களையில்லை. செல்லனைக் கண்டதும் கேட்டார் "நடராஜன் எங்கே?" என்று.

அவர் குரலிற்தான் எத்தனை சோகம். 'டேய்' என்ருல் இரண்டு மைலுக்குக் கேட்கும் தன் தகப்பனுரா இப்படித் தாழ்ந்த குரலிற் கேட்கிருர்? எல்லாரும் நடராஜனைப் பற்றிக் கவலைப்படுகிருர்களே. நாம் எல்லாரிடமும் அவனைக் காணுமலே கண்டதாகப் பொய் சொன்னேமே. இதனுல் என்ன ஆகுமோ என்று எண்ணினுன் செல்லன். எல்லாருடைய கவலையை...ம், எல்லாருடைய பயத்...தையும் கண்டபோது அ...ன் உள்ளத்தையும் பயம் ...டித்து ஆட்டத் தொட...ங்கிற்று. ஆனுலும் அப்பாவிடமும் எப்படியோ அம்மாவிடம் சொன்ன பொய்யைத்தான் சொன்னுன். கேட்டுக்கொண்ட தந்தை ஏதும் பேசாமலே உள்ளே சென்றுவிட்டார்.

செல்வராஜன் சவர்க்காரத்தை எடுத்துக்கொண்டு சிந்தித்தபடியே கிணற்றடிக்குச் சென்ருன். அண்ணனிடம் தனிமையாகப் பேச வேண்டும் என்று விரும்பிய கனகமும் குடத்தை எடுத்துக்கொண்டு அவன் பின்னுற் சென்ருள்.

அவள் வைத்த குடத்திலே தண்ணீரை நிரப்பினுன் செல்லன். கையைப் பிசைந்துகொண்டு நின்ற கனகம் அவனிடம் கேட்டாள்: "உண்மையாகவே அவரைக் கண்டீர்களா? அண்ணு." ஆசை வெட்கமறியாது என்று சொல்கிருர்கள். பயங்கூட வெட்கமறியாதுதான். நடராஜன் என்ன ஆனுனே எங்கே போனுனே என்றபயத்திற்தான் கனகமும் தன் அண்ணனிடம் இப்படிக் கேட்டாள்.

"உண்மையாகத்தான் பார்த்தேன். நாளைக்குப் போய்ச்சேர்ந்ததும் அவன் எனக்குக் கடிதம் எழுதுவான்" என்ருன் செல்லன்.

அதற்குமேல் ஒன்றுங் கேட்காமல் கனகம் திரும்பி வரும்போது யோசனையிற் தள்ளாடிக்கொண்டிருந்த கால்கள் ஒன்றை ஒன்று இடறின. அவள் இடுப்பிலிருந்த குடம் பொதெென்று கீழே விழுந்து உடைந்து முற்றமெங்கும் வெள்ளக்காடாகியது.

சப்தத்தைக் கேட்ட கந்தையா வெளியில் வந்து கனகத்தின் நிலையைக் கண்டதும் "இதேதடா அபசகுனம்" என்று பயந்தார். அவர் மனது நிலைகொள்ளவில்லை. —தொடரும்

## விடைகள்

579. மயில்வாகனப் புலவர்.

580. நியூசிலந்து மக்கள்.

581. 108.

582. பாடலி புத்திர நகரம்.

583. அர்ச். இராயப்பர் (சென்ற் பீட்டர்).

# வாடி வீட்டு மகாநாடு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஒன்றென்று இதிலிருந்து அறியும்போது இது வேண்டும் என்று நடந்த ஒரு சதியாயிருக்கலாம் என்று பலர் சொல்வதை நாம் நம்ப வேண்டியிருக்கிறது.

### விவசாய மகாநாடு

மட்டக்களப்பில் உள்ள எம். பி. க்களும் உயர்தர அரசாங்க உத்தியோகத்தர் சிலரும், இடைக்கிடை ஒன்றுகூடி இங்கு விவசாய வளர்ச்சிக்கானவற்றை ஆராய்தல் வழக்கம். சென்றவாரம் கச்சேரியில் இதற்காகக் கூடிய மகாநாட்டிலே சில நன்முடிபுகள் நிறைவேறியுள்ளன. அவற்றுள் காத்தான் குடிக்கும், பட்டிருப்புக்கும் இடைப்பட்டு அரசாங்கத்துக் குரியதாய்க் கிடக்கும் நிலப்பரப்பில் முந்திரிகைச் செடி வளர்க்கும் பரிசோதனை இயக்கம் ஒன்று வரப்போதல் குறிப்பிடத்தக்கதாகும். ஆளுக்கு 5 ஏக்கர்வீதம் 100 பேருக்கு இச்செய்கைக்காக நிலம் கொடுப்பதென்றும், உணவு விருத்திப்பகுதி இயைந்து கொண்டால் ஏக்கருக்கு ரூபாய் 25 வீதம் நிலம் திருத்தும் செலவுகட்காகப் பணம் கொடுப்பதென்றும் மகாநாடு முடிவுசெய்துள்ளது. இத்திட்டம் உருப்படின் முந்திரிகைப் பழம், பருப்பு என்பவற்றுக்கு மட்டக்களப்புநாடு பெற்றுள்ள பெயர் இன்னும் வளர்ந்து நிற்கும் எனலாம்.

வாவிக்கரையை அடுத்த வயல்களில் வெள்ளம் ஏற்சேதம் செய்யாதிருக்கும் பொருட்டு மட்டக்களப்பு வாவி கடலோடு கலக்கும் சங்கமம் அலைகளால் மணல்மேடு ஆகாமல் என்றும் திறந்திருக்க வேண்டும் என்று செய்த முடிபும் வரவேற்கத் தக்க ஒன்ருகும். இது அரசினருடைய கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிகிறேன். பொதுமக்கள் நீண்டகாலமாக இத்தகைய ஒன்றை வேண்டியிருக்கிருர்களாதலால் அரசாங்கத்தின் சாதகமான முடிபு எல்லாரதும் மதிப்பினை இதிற் பெறுமென்பது திண்ணம்.

### குழாய்நீர் வசதி

பட்டிருப்புத் தொகுதியினைச் சேர்ந்த நாய்ப்பட்டிமுனை, சேனைக்குடி, துறைநீலாவணை என்னும் ஊர் மக்கள் கோடைகாலத்தில் குடிக்க நீர் பெருது வருந்துதல் உண்டு. இத்துன்ப மீட்சிக்காக அன்னுர் எத்தனையோ முயற்சிகள் எடுத்தும பயன் பெற்றிலர். அண்மையில் இத்தொகுதிப் பிரதிநிதியாகிய திரு எஸ். எம். இராசமாணிக்கம் அவர்களின் முயற்சி இவ்வகையிற் பெரும்பயன் அளித்துள்ளமை இப்பகுதி மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்துள்ளது. இரண்டு லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பெற்றுள்ளதாகவும் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி இவ்வேலை தொடங்கி வைக்கப்படும் என்றும் அறிகின்ருேம். பெரிய நீலாவணைக் கடற்கரையில் இத்திட்டத்துக்கான கிணறுகள் வெட்டப்பட்டு அங்கிருந்து பெரிய குழாய்கள்மூலம் குறிப்பிட்ட இடங்கட்கு நீர்கொண்டு போகப்படும். வற்ருத சுத்தமான நீர்நிலைகள் இப்பகுதியில் அமைக்கலாம் என்பது பரிசோதனைமூலம் முடிவாயுள்ளது. மிக இன்றியமையாத இத்திட்டத்தின் ஆக்க வேலைக்குழைத்த எல்லாரையும் மக்கள் வாழ்த்துகின்றனர்.

## பிரமஸ்ரீ சி. பொ. சுந்தர சர்மா பிரிவு

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)


அவர்களுக்கு ஓர் அரிய பொழுதுபோக்காக விருந்தது. அத்துடன் சமூகப் பணிகளில் ஈடுபட்டுத் தமது சொந்தக் கிராமமாகிய குப்பிழானின் வளர்ச்சிக்காக உழைத்து வந்தார்கள்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த சர்மா அவர்கள் இவ்வுலகை நீத்தவிடத்தும் அவரது புகழ் என்றும் நின்று நிலவுமென்பதற்கு ஐயமின்று.

ஐயர் அவர்களின ஈமச்சடங்குகள் சென்ற வியாழக்கிழமை நண்பகல் அவர்களின் இல்லத்தில் முறைப்படி நடைபெற்றன. அவர்களின் நண்பர்களும் மாணவர்களும் உற்ருர் உறவினரும் தங்கள இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர். மலாயாவிற் பணியாற்றி இளைப்பாறியவரும் ஐயர்அவர்களின் அரிய நண்பர்களில் ஒருவருமான திரு. கோ. வைத்தியலிங்கம், திரு. ச. அம்பிகைபாகன், திரு. வி. வைரமுத்து, திரு. இராஜ அரியரத்தினம் ஆகியோர் அன்னுரின் அரிய சேவைகளையும் நற்குண நற்செய்கைகளையும் எடுத்துரைத்தனர்.

அன்னுரின் பிரிவால் துயருறும் மனைவி மக்களுக்கும் சகோதரிகளுக்கும் உற்ருர் உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம். ஐயர் அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

கோண்டாவிற் பகுதியில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
பி. நடராசா
பத்திரிகை விற்பனையாளர்
ஸ்ரேஷனடி கோண்டாவில்




இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம் — குரும்பசிட்டி, முத்தையா — சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் 1955ஆம் ஆண்டு ஒக்டோபர்மீ 16ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.